விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 24 வியாழக்கிழமை (09.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 264

## நாட்டை மீளத் திறப்பதாயின்
# திட்டங்களை உருவாக்கி பகிரங்கப்படுத்துங்கள்



### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத்

(கொழும்பு)

**எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டைத் திறப்பதாயின் திட்டங்களை முன்கூட்டியே உருவாக்கி அதனை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்துவது பொருத்தமானது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் அவர் 15

---

நாட்டில் மேலும்

# 2,917

## பேருக்கு தொற்றுறுதி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 2 ஆயிரத்து 917 பேருக்கு 15

---

கொரோனாவால்

## ஒரே நாளில் 185 பேர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் மேலும் 185 பேர் உயிரிழந்த 15

---

## யாழ்.பல்கலை பட்டமளிப்பு விழா

### ஒக்ரோபருக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16,17,18 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா 15

---

பொது முடக்கம்

## தளருமா? நீடிக்குமா?

நாளை தீர்மானம்

05ஆம் பக்கம் பார்க்க

---

## கர்ப்பமடைவதனை ஒத்திவையுங்கள்

### மருத்துவ நிபுணர் அறிவுரை

(கொழும்பு)

இலங்கையில் பெண்கள் இயலுமானால் கர்ப்பமடைவதை ஒரு வருடத்துக்கு தள்ளிப்போடுமாறு பெண் நோயியல் மருத்துவ 15

---

## இந்தியக் குடியுரிமை திருத்தச் சட்டம் இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம்

### தமிழக சட்டசபையில் தீர்மானம்

(சென்னை)

இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட மாபெரும் துரோகம்.

எனவே அந்தச் சட்டத்தை இரத்துச்செய்ய வேண்டும் எனக் கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் 15

---

## அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று யாழ். விஜயம்



(யாழ்ப்பாணம்)

இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இன்று யாழ். மாவட்டத்திற்கான கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நாமல் ராஜபக்ஷ அபிவிருத்திக் 15

---

## வவுனியாவில் விபத்து இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா கனகராயன் குளம் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.




15

---

யாழில் ஐவர் உட்பட

## வடக்கில் 7 பேர் கோவிட்டால் மரணம்



(யாழ்ப்பாணம்)

யாழில் ஐவர் உட்பட வடக்கில் 7 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பருத்தித்துறையைச் சேர்ந்த 85 வயது 15

---

கொரோனா

## யாழ் - 41 வடக்கு - 75

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 249 பேருக்கு நேற்று மேற்கொள் 15

---

நம்பிக்கை தரும் அளவுக்கு

## கொரோனா அபாயம் யாழில் குறையவில்லை

### மாவட்ட அரச அதிபர்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா அபாயம் நம்பிக்கை தரும் அளவுக்கு குறைவதாக இல்லை எனக் கூறியிருக்கும் யாழ். மாவட்ட அரச அதிபர் 15

---

முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான

## நம்பிக்கையில்லா தீர்மானம் என் மீது திணிக்கப்பட்டது



### சீ.வீ.கே.சிவஞானம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் என் மீது திணிக்கப்பட்டது 15

# சுகாதார நெருக்கடியை கையாள்வதில் அரசாங்கம் தோல்வி அடைந்துள்ளது

## வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலிய

(கொழும்பு)

அரசாங்கம் குறுகியகால இலக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்கியதுடன் நாட்டின் சுகாதார நெருக்கடியைக்கையாள்வதில் தோல்வியேற்பட்டுள்ளமை தெளிவாகப் புலப்பட்ட போதிலும், உரிய தரப்பினரிடம் பொருத்தமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமையின் விளைவாக கோவிட் - 19 வைரஸ் பரவலைக் கையாள்வதில் கடந்த 2020 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் பெற்ற வெற்றியை தூரமாகத் தூக்கியெறிந்திருக்கின்றது என்று சுகாதாரக் கொள்கைகளுக்கான நிலையத்தின் தலைவர் வைத்திய நிபுணர் ரவிரன்னன் எலிய சுட்டிக்காட்டியுள்ளார்.

"இழப்புக்களை மதிப்பீடு செய்தல், ஆபத்திலிருக்கும் ஒரு ஜனாதிபதியின் மரபு" என்ற தலைப்பில் தேசிய ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியாகியிருக்கும் கட்டுரையை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கட்டுரையில் கோவிட் - 19 வைரஸ் பரவல் காரணமாகத் தற்போது நாடு எதிர்கொண்டிருக்கும் நெருக்கடி மற்றும் அதனைக் கையாள்வதில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக தற்போதைய தரவுகளை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் இவ்வாண்டின் முடிவில் இலங்கையில் 20,000 ஐ விடவும் அதிகமான கொவிட் - 19 மரணங்கள் இலங்கையில் பதிவாகும் என்றும் தடுப்பூசி வழங்கல்நடவடிக்கையைப்பொறுத்தமட்டில், தற்போது வழங்கப்பட்டுவரும் தடுப்பூசிகளை இரண்டு மடங்காக அதிகரிக்கவேண்டும் என்றும் வைத்திய நிபுணர் ரவீந்திர ரன்னன் எலியவினால் கூறப்பட்ட விடயமும் அக்கட்டுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வைத்திய நிபுணர் ரவி ரன்னன் எலியவின் டுவிட்டர் பதிவில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

"இதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் விசேட அவதானம்செலுத்தவேண்டும். குறுகியகால இலக்குகளுக்கு முக்கியத்துவம் வழங்கியதுடன் நாட்டின் சுகாதார நெருக்கடியைக் கையாள்வதில் தோல்வியேற்பட்டுள்ளமை தெளிவாகப் புலப்பட்ட போதிலும், உரிய தரப்பினரிடம் பொருத்தமான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறியமையின் விளைவாக கோவிட் - 19 வைரஸ் பரவலைக் கையாள்வதில் கடந்த 2020 ஆம் ஆண்டில் ஆரம்பத்தில் பெற்ற வெற்றியை அரசாங்கம் தூக்கியெறிந்திருக்கின்றது. அத்தோடு கோட்டாபய ராஜபக்ஷவின் மரபும் தோல்விகண்டிருக்கிறது.

இது தமக்குத் தாமாகவே ஏற்படுத்திக்கொண்ட நெருக்கடியாகும். தமது ஆதரவாளர்களின் குறுகியகால இலக்குகளை விடவும் நீண்டகால நலன்களுக்கு முக்கியத்துவம் அளித்துச்செயற்படக்கூடிய இயலுமையானது வலுவானதும் நியாயமானதுமான தலைமைத்துவத்திற்குரிய முக்கிய குணாம்சமாகும்.

அத்தோடு குறிந்ததொரு விடயத்தைக் கையாள்வதில் பின்பற்றப்பட்டுவரும் பொறிமுறை பொருத்தமானதாக அமையவில்லை என்பதை நிரூபிக்கும் வகையிலான சான்றாதாரங்கள் காணப்படும்பட்சத்தில் அதற்குப் பதிலாகப் புதிய நுட்பங்களை சிந்திக்க மற்றும் தவறுகளைத் திருத்திக்கொள்கின்ற ஆற்றலும் சிறந்த தலைமைத்துவத்திடம் காணப்படவேண்டும்.

அரசாங்கத்தின் தவறுகளைத் திருத்துவதற்கு எதிர்க்கட்சி எதனையும் செய்யவில்லை. அரசாங்கமும் அதன் நிபுணர்களும் போதுமானளவு அவர்களது கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டார்கள்.

துரதிஷ்டவசமாக இதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையில் நாட்டு மக்கள் இருக்கின்றார்கள்" என்று ரவி ரன்னன் எலிய அவரது டுவிட்டர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மரண அறிவித்தல்

## பொன்னையா இராசரத்தினம்



தோற்றம் : 23.04.1938
மறைவு : 07.09.2021

பருத்தித்துறை வராத்துப்பளையைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா இராசரத்தினம் கடந்த 07.09.2021 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - லக்ஸ்மிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சுசிலாதேவியின் ஆருயிர்க் கணவரும் இராசகரன் (பிரான்ஸ்), இராசராணி (பேபி - பிரான்ஸ்), சர்மிளா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் டக்ளஸ், சசிகரன், சுதனா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற பொ. இராசையா (ஓய்வுபெற்ற உதவிப் புகையிரத அத்தியட்சகர்), காலஞ்சென்ற பூவிலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ்./ பரியோவான் கல்லூரி), திருமதி சங்கரப்பிள்ளை பாக்கியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை), திரு. சிவஞானம் (ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இ.போ.ச), திருமதி அன்டனி பரமேஸ்வரி (ஓய்வுபெற்ற உப அதிபர் - ஆனைப்பந்தி மெ.மி. வித்தியாலயம்), திரு. பரமானந்தம் (பிரான்ஸ்), திரு. பாலச்சந்திரா (ஓய்வுநிலை ஆசிரியர் - தி/புனித சூசையப்பர் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சாருசன், சானுகன், தேனுசன், மெர்லின், செவ்ரின், தூயவன், சஞ்செய், துசாந் ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் நேற்று (08.09.2021) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

இராசகரன் : +33662605055
இராசராணி (பேபி) : + 33651720619
சர்மிளா : +41765040048

தகவல்:-
குடும்பத்தினர்

# உடுப்பிட்டியில் இருதரப்பினர் இடையே மோதல் சம்பவம்

## கிராமத்தை முற்றுகையிட்ட இராணுவம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டியில் கிராமத்தில் இரண்டு பகுதியினருக்கு இடையே இடம்பெற்று வந்த மோதல் ஊர்ப் பிரச்சினையாக மாறியதையடுத்து பொலிஸாரால் கோரப்பட்டதற்கு அமைய இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதனால் அந்தக்கிராமத்தில் நேற்று இரவு பதற்றநிலை ஏற்பட்டிருந்தது.

உடுப்பிட்டி இலகடி மற்றும் வன்னிச்சி அம்மன் கோவில் வேலிநந தோட்டம் பகுதியைச் சேர்ந்த இருதரப்பினர் இடையே இடம்பெற்று வந்த மோதல் கடந்த சில நாட்களாக ஊர்ப் பிரச்சினையாக மாறியது.

இந்த மோதலில் சிலர் தலைமறைவாகிய நிலையில் வல்வெட்டித்துறை பொலிஸாரின் அழைப்பின் பேரில் நேற்றிரவு இராணுவத்தினர் சுற்றிவளைத்து பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

அதனால் அந்தக்கிராமத்தில் பதற்ற நிலைஏற்பட்டுள்ளது.(ம-33)

# துண்டாடப்பட்ட கை, கால்கள் சிகிச்சை மூலம் மீள் இணைப்பு

## யாழ். போதனா வைத்தியர் இளஞ்செழியபல்லவன் சாதனை

(யாழ்ப்பாணம்)



யாழ். பருத்தித்துறை கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது தவறி கடலில் விழுந்த நிலையில் வலது கை மற்றும் வலது காலில் படகின் காற்றாடிக்குள் சிக்கிசிதைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவருக்கு பிளாஸ்டிக்சத்திர சிகிச்சை மூலம் சிதைவடைந்த பாகங்கள் மீள இணைக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியபல்லவன் சுமார் 5 மணி நேரம் மேற்கொண்ட சத்திர சிகிச்சை மூலம் மீனவருக்கு மீண்டும் மறுவாழ்வு கிடைத்திருக்கின்றது.

மன்னாரைச் சேர்ந்த குறித்த மீனவர் பருத்தித்துறை கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது தவறிபடகின் பின்புறமாக கடலில் விழுந்துள்ளார். இதன் போது படகை இயக்கும் உலோக காற்றாடி மீனவரின் வலது கால் மற்றும் கையை சிதைத்துள்ளது.

இதனையடுத்து மீனவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை நிபுணர் இளஞ்செழியபல்லவன் தலைமையிலான மருத்துவர்கள் குழாம் சிதைந்த பாகங்களை மீளப் பொருத்திமறுவாழ்வு கொடுத்துள்ளனர். (ம)

# தாயின் மரண செய்தியை தாங்கிக்கொள்ள முடியாத மாணவன் தூக்கிட்டு தற்கொலை

(கொழும்பு)

தாயின் மரணச் செய்தியை தாங்கிக்கொள்ளமுடியாத வேலணை சுருவிலைச் சேர்ந்த வெள்ளவத்தையில் பொறியியல் துறையில் கல்வி கற்கும் 26 வயதான பல்கலைக்கழக மாணவன் ஒருவர் தற்கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் வெள்ளவத்தை, மகேஷ்வரி வீதி பகுதியில் இடம்பெற்றுள்ளதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் தாயின் மரணச் செய்தியை தாங்கிக்கொள்ள முடியாமல் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மாணவனின் தாய்மாரடைப்புக் காரணமாக களுபோவில வைத்திய சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த தகவலை மூத்த சகோதரன் வீட்டிலிருந்த தனது இளைய சகோதரனுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனால் மனமுடைந்த இளைய சகோதரன், வீட்டின் மின் விசிறியில் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

தற்கொலை செய்து கொண்டவர் தாயின் மீது அளவுகடந்த அன்பு கொண்டிருந்ததாக அவரது மூத்த சகோதரன் பொலிஸ் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். (ம)

# மரண அறிவித்தல்

பிறப்பு

15 ❖ 01 ❖ 1941



இறப்பு

07 ❖ 09 ❖ 2021

## அமரர். சின்னத்தம்பி சரஸ்வதி

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கரம்பைக்குறிச்சி வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சின்னத்தம்பி சரஸ்வதி அவர்கள் 07.09.2021 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு- மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி, நீலாம்பிகை, காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் மோகனாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலரத்தினம் மற்றும் யோகேஸ்வரி, கமலாதேவி, சிவகாமி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜயராணி மற்றும் தியாகேசு, கணபதிப்பிள்ளை, முதலிக்குட்டி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நகுலேஸ்வரன், ஜெயகுமார், ஜெயரூபன் ஆகியோரின் அன்பு மாமியும், கவிப்பிரியா, சங்கீதன், கானப்பிரியா, சைந்தவி, சாரங்கி, சாகித்தியன், லதாங்கன், லாவண்ணியன், லதர்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**கரம்பைக்குறிச்சி, வரணி.** (7369) **-குடும்பத்தினர்-**



# நான்கு நாடுகள் பங்கேற்கும் சர்வதேச கால்பந்தாட்ட தொடர்

4 நாடுகள் பங்கேற்கும் சர்வதேச கால்பந்தாட்டத் தொடரொன்றை நடத்த இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுபோன்ற போட்டித் தொடரொன்று இலங்கையில் நடத்தப்படுவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கிண்ணம் என்றபெயரில் நடத்தப்படவுள்ள இப்போட்டித் தொடரில் இலங்கை, மாலைதீவு, பங்களாதேஷ், சீசெல்ஸ் ஆகிய 4 நாடுகள் பங்கேற்கவுள்ளன.

இப்போட்டித் தொடரில் சம்பியனாகும் அணிக்கு 5000 அமெரிக்க டொலர் பணப்பரிசாக வழங்கப்படவுள்ளதுடன், இப்போட்டித் தொடரில் பங்கேற்பதாக மூன்று வெளிநாடுகளும் உறுதியளித்துள்ளன.

சகல போட்டிகளும் கொழும்பு குதிரைப் பந்தயத் திடலில் நடத்தப்படவுள்ளதுடன், நவம்பர் மாதத்தின் 8 ஆம், 11 ஆம், 14ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக, இப்போட்டித் தொடரில் பங்கேற்கும் அனைவரும் "பயோ பபிள்" முறையில் ஈடுபடுத்தப்பட்டு இப்போட்டித் தொடர் நடத்தப்படவுள்ளதாக இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது. (4-6)

# பரா ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற வீரர்களுக்கு கார் பரிசு



டோக்கியோ பரா ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தினேஷ் பிரியன்த மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற துலான் கொடிதுவக்கு ஆகிய இருவருக்கும் இரண்டு கார்களை பரிசளித்துள்ளது ஜப்பானிலுள்ள ஸ்ரீலங்கா ஓட்டோமொபைல் அசோசியேஷன்.

உலக சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற தினேஷ் பிரியன்த மற்றும் வெண்கலப் பதக்கம் வென்ற துலான் கொடிதுவக்கு ஆகிய இருவருக்கும் ஜப்பானிலுள்ள ஸ்ரீலங்கா ஓட்டோமொபைல் அசோசியேஷன் இரண்டு கார்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

அதற்கான மாதிரி படிவத்தை தினேஷ் மற்றும் துலான் ஆகிய இருவருக்கும் அந்நிறுவனத்தின் அதிகாரிகள் வழங்கியுள்ளனர். (4-6)

# இந்திய கிரிக்கெட் வீரர் தவான் தம்பதியர் விவாகரத்து



இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஷிகர் தவானும், அவரது மனைவி ஆயிஷா முகர்ஜியும் விவாகரத்து செய்து கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இவர் கடந்த 2012 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய குத்துச் சண்டை வீராங்கனை ஆயிஷாவை திருமணம் செய்து கொண்டார்.ஆயிஷா ஏற்கெனவே திருமணம் ஆனவர்.இவர் தனது முதல் கணவரை 2012 ஆண்டு விவாகரத்து செய்து ஷிகர் தவானை திருமணம் செய்து கொண்டார்.

இந்த நிலையில் ஷிகர் தவானும். ஆயிஷா முகர்ஜியும் விவாகரத்து செய்து கொண்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஆயிஷாள்ள முகர்ஜி தங்களது விவாகரத்து குறித்து ஒரு நீண்ட இன்ஸ்டாகிராம் பதிவையும் வெளியிட்டுள்ளார். (4-6)

# ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை பாதுகாக்க மாட்டோம்

## நாமல் தெரிவிப்பு

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட குற்றவாளிகளை ஒருபோதும் பாதுகாக்க மாட்டோமென விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம்உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் கோப் குழுவும் கடந்த காலங்களில் அவதானம் செலுத்தியிருந்தது. இது தொடர்பில் கோப் குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் புதிய அறிக்கைக்குப் பின்னர் நடவடிக்கை எடுக்க எதிர் பார்த்துள்ளோம்.

இலங்கைக் கிரிக்கெட் தொடர்பில் உலக அளவில் கவனம் செலுத்தப்படும் என்பதால், இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் இடம் பெறும் விசாரணைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்படாது.

இலங்கைக் கிரிக்கெட் நிறுவனத்தில் ஊழல் மோசடியில் ஈடுபட்டவர்களை விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில் நானோ எங்களது அரசாங்கமோ பாதுகாக்கப் போவதில்லை. அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார். (4-6)

## சுழலில் சிக்கிய தென்னாபிரிக்கா

# தொடரை கைப்பற்றியது இலங்கை




தென்னாபிரிக்க அணிக்கெதிரான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இலங்கை அணி2-1என கைப்பற்றியுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடியது.

இரு அணிகளுக்குமிடையில் இடம்பெற்ற முதல் போட்டியில் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான 2 ஆவது ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி டக்வேர்த் லூயிஸ் முறையில் 67 ஓட்டங்களால் வெற்றிபெற்று இரு அணிகளும் 1-1 என சம நிலையில் இருந்தன.

இதையடுத்து இரு அணிகளுக்குமிடையிலான 3 ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம்கொழும்பு ஆர்பிரேமதாஸ மைதானத்தில் இடம் பெற்றது.போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகளை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணி சார்பில் சரித்த அசலங்க 47 ஓட்டங்களையும் தனஞ்சய டி சில்வா 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

தென்னாபிரிக்க அணி சார்பில் பந்துவீச்சில் கேசவ் மகராஜ் 3 விக்கெட்டுகளையும் ஜோர்ஜ் லின்டி மற்றும் தப்ரய்ஸ் சம்சி ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

204 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிஎன்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி30 ஓவரில் 125 ஓட்டங்களைப்பெற்று 78 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

தென்னாபிரிக்க அணி சார்பில் துடுப்பாட்டத்தில் கென்றிச் கலசின் 22 ஓட்டங்களையும் ஜனிமன் மலன் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இலங்கை அணியின் பந்து வீச்சில் மகேஷ் தீக்சன 4 விக்கெட்டுகளையும் துஷ்மந்தசமிர மற்றும் வனிது ஹசரங்க ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.(4-6)


## இராசிபலன்

09.09.2021
ஆவணி 24, வியாழக்கிழமை
திருதியை பின்னிரவு 2.45 மணிவரை
அத்தம் மாலை 5.25 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34- 3.04 மணிவரை
சந்திராஷ்டமம்-பூரட்டாதி, உத்தரட்டாதி வளவன்


மேஷம்
நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், உறவினர் வருகையுண்டு, செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள்.


ரிஷபம்
பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பிள்ளைகளின் நீண்டகாலக் கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு.


மிதுனம்
வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், பயணங்கள் கைகூடும்.


கடகம்
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர்.


சிம்மம்
பேச்சில் இனிமை தென்படும், மதிப்பும் மரியாதையும் உயரும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.


கன்னி
பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், கோரிக்கைகள் நிறைவேற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.


துலாம்
ஒரு சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்படலாம், மற்றவர்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள்.


விருச்சிகம்
கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொதுவாழ்வில் புகழ் கூடும், போசன சுகமுண்டு.


தனுசு
வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்
ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், நல்லவர்கள் தொடர்பால் நலம் காணும் நாள், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


கும்பம்
மற்றவர்களிடம் பேசும்போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கொடுக்கல்- வாங்கல்களில் சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பொறுமையால் பெருமை காணவேண்டிய நாள்.


மீனம்
குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

கோபமும் பொறாமையும் மனிதனைக் கொன்றுவிடும் சக்தியைப் படைத்தது

# ஈழ ஆதரவாளரான கவிஞர் புலமைப்பித்தன் காலமானார்

(சென்னை)
பிரபல கவிஞரும், ஈழத் தமிழர் விடுதலைப் போராட்ட ஆதரவாளரும், தமிழக அரசின் முன்னாள் சட்ட மேலவைத் துணைத் தலைவராக இருந்தவருமான புலமைப்பித்தன் உடல்நலக் குறைவு காரணமாக நேற்றுக் காலை தனது 86 ஆவது வயதில் காலமானார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் தீவிர ஆதரவாளரான இவர், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணி வந்தவராவார்.

ஈழத் தமிழர் விவகாரம் தமிழ்நாட்டில் உச்சம் தொட்ட போது தமிழ் நாட்டில் இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் அடிக்கடி சென்று உரையாடும் இடமாக புலமைப்பித்தனின் வீடு இருந்தது.

அத்துடன், ஈழ விடுதலைக்குப் பங்காற்றி, உதவிகளைக் செய்த முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆருடன் 22 ஆண்டுகள் இணைந்து இருந்த புலமைப்பித்தன், போராட்டத்துக்கான ஆதரவைக் பெற்றுக் கொடுப்பதிலும் பெரும் பங்காற்றினார்.

ராமசாமி என்ற இயற்பெயர் கொண்ட புலமைப்பித்தன்



குடியிருந்த கோயில் திரைப்படத்தில் "நான் யார் நான் யார்" பாடலின் மூலம் எம்.ஜி.ஆரின் அபிமானத்தைப் பெற்றார். பின்னர் அடிமைப் பெண் படத்தில் ஆயிரம் நிலவே வா போன்ற பாடல்களையும் எழுதி தொடர்ந்து புகழ் பெற்றார். (நி-5)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு தளர்த்தப்படுமா? நீடிக்கப்படுமா?

## நாளை தீர்மானம்

(கொழும்பு)
நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு பின்னரும் நீடிக்கப்படுமா? என்பது தொடர்பில் நாளை வெள்ளிக்கிழமை தீர்மானம் எடுக்கப்படும் என தெரியவருகின்றது.

கொரோனா ஒழிப்பு செயலணியின் வாராந்த மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நாளை கூடவுள்ளது.

இதன்போதே நாட்டின் தற்போதைய நிலைமை மீளாய்வு செய்யப்பட்டு ஊரடங்கு தளர்த்தப்படுமா? அல்லது நீடிக்கப்படுமா? என்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்.

நாட்டில் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை ஒக்டோபர் 2ஆம் திகதிவரை நீடிக்குமாறு மருத்துவ சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மற்றுமொரு மருத்துவ நிபுணரும் பதவி விலகினார்



(கொழும்பு)
கொரோனா ஒழிப்பு தொழில்நுட்ப குழுவில் இருந்து மற்றுமொரு விசேட வைத்திய நிபுணர் இராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நிருவிந்தன வைத்தியர் சங்கத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் அசோக் குணரத்ன என்ற வைத்திய நிபுணரே இராஜினாமா செய்தவராவார்.

சுமார் ஒன்றரை வருட காலமாக குறித்த தொழில்நுட்ப குழுவிலிருந்த போதிலும் கொரோனா ஒழிப்பிற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அதனால் தொடர்ந்து குறித்த குழுவில் உறுப்பினராக இருப்பதால் எவ்வித பயனும் இல்லை என அவர் தெரிவித்தார். (நி-5)

# நாட்டைத் திறப்பதெனில் உரிய திட்டமிடல் அவசியம்

(கொழும்பு)
எதிர்வரும் திங்கட்கிழமை நாட்டை திறப்பதாக இருந்தால் முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டுமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார். (நி-5)

# மன அழுத்தத்திற்கு ஆளாகும் கொரோனா நோயாளிகள்

(கொழும்பு)
கொரோனாவிலிருந்து மீண்டவர்கள் கடும் உடல் உழைப்பில் ஈடுபடக்கூடாது. உடலை வருத்தும் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது அல்லது உடற்பயிற்சிகளை செய்யக்கூடாது என மருத்துவ நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பெருமளவானவர்கள் அல்பா அல்லது டெல்டா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள மருத்துவ நிபுணர்கள் இதிலிருந்து மீண்டவர்கள் நீண்டகால பாதிப்புகளை எதிர்கொள்ளக்கூடும்.

அசாதாரண சோர்வு, கவனம் செலுத்துவதில் சிரமம், உடல்வலிகள் குறிப்பாக மூட்டுவலி, ஆர்வமின்மை போன்ற அறிகுறிகளை அவர்கள் வெளிப்படுத்துவார்கள்.

அத்துடன் கொரோனா நோயாளிகளை சமூகம் நடத்தும் விதம் காரணமாக சில நோயாளிகள் மன அழுத்தத்திற்கு உள்ளாகக்கூடும் எனவும் மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குருதி உறைவு போன்றவை காரணமாக முழுமையாக படுக்கையில் ஓய்வில் இருக்க வேண்டியதில்லை எனவும் நோயாளிகள் கொரோனாவிலிருந்து மீளும்போது அவர்களது நுரையீரல் இறுக்கமானதாகி விடுகின்றது.

இதனால் சுவாசிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என மருத்துவ நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி-5)

# போதியளவு மின் தகன மேடைகள் இல்லாததால்

# வடக்கு கிழக்கில் தேங்கும் சடலங்கள்

## உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுமந்திரன் கோரிக்கை

(கொழும்பு)

**வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கொரோனா சடலங்கள் தேங்கிக் கிடக்கின்றன. எனவே உடனடியாக எரிவாயு மின் தகன மேடைகளை வடக்கு, கிழக்கில் அமைக்க நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழ்தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. எம்.ஏ.சுமந்திரன் கோரிக்கை விடுத்தார்.**



பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உரையாற்றும் போதே இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களை சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய எரியதற்கு அவசியமான எரிவாயு மின் தகன மேடைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போதியளவு இல்லை. இதனால் வடக்கு, கிழக்கில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் சடலங்கள் அதிகளவில் தேங்கிக் கிடக்கின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய மாவட்டங்களில் மாத்திரமே எரிவாயு மின் தகன மேடைகள் உள்ளன. மட்டக்களப்பில் இல்லை. எனவே நிதிஅமைச்சர் அவசரமான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு தற்காலிகமாகவேனும் எரிவாயு மின்தகனமேடைகளை வடக்கு, கிழக்கில் அமைத்து கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் இறுதிக்கிரியைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)



நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் வள்ளியம்மாள் காந்தர்வக் கல்யாண நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம்-சிவசுந்தன்,ரவிசாந்)

# 10 மில்லியன் நிதியில் புதிய நோயாளர் விடுதி

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி பிரதேச வைத்தியசாலையில் பத்து மில்லியன் ரூபாய் செலவில் புதிய நோயாளர் விடுதிஅமைப்பதற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது.

வரணிபிரதேச வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் பசுபதிஅச்சுதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் திணைக்கள திட்டமிடல் மருத்துவ அதிகாரி வைத்தியர் மோகன் கலந்து கொண்டார்.

குறித்த விடுதியானது "பிஎஸ்.எஸ்.பி" திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சின் ஊடாக நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

அத்துடன் வைத்தியசாலையில் 4மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் மகப்பேற்று விடுதி ஒன்றும் புதிதாக நிர்மாணிக்கப்பட இருப்பதாக வைத்திய அத்தியட்சகர் ப.அச்சுதன் தெரிவித்தார். (4-7-30)

# வடக்கில் கடந்த வாரம் மாத்திரம் 4,000 தொற்றாளர்கள் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் கடந்த ஒரு வாரத்தில் 4 ஆயிரத்து 83 கொவிட்-19 நோய்த் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 106 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதாரத் துறையின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும் வடக்கு மாகாணத்தில் கொவிட்-19 நோயினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 515 ஆக உயர்வடைந்துள்ளது.

இதுவரை 2020 மார்ச் தொடக்கம் டிசெம்பர் வரை வவுனியா மாவட்டத்தில் ஒருவர் மட்டுமே கொவிட்-19 நோயினால் உயிரிழந்தார். எனினும் நேற்று முன்தினம் செப்ரம்பர் 7ஆம் திகதி வரை 515 பேர் கொவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதத்தில் அதிகபடியாக 228 பேர் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகபடியாக 303 பேரும் வவுனியா மாவட்டத்தில் 119 பேரும் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர். கிளிநொச்சியில் 45 பேரும் முல்லைத்தீவில் 28 பேரும் மன்னாரில் 20 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் வரை 30 ஆயிரத்து 912 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 474 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 635 பேரும் வவுனியா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 788 பேரும் முல்லைத்தீவில் 2 ஆயிரத்து 192 பேரும் மன்னாரில் ஆயிரத்து 823 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (4-7-33)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசி வேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி பளை இரட்டைக்கேணி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக் குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-7-6)

# சுகாதார நடைமுறைகளை மீறி அச்சுவேலியில் திருமண நிகழ்வு

## பொலிஸாரால் வழக்குத் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு வேளையில் அச்சுவேலி வடக்கில் நேற்று இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டதாக பொலிஸாரினால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்த விருந்தினர்களை அங்கிருந்து அனுப்பிவிட்டு மணமக்கள் உள்ளிட்ட சிலரிடம் கொவிட் பரிசோதனையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

குறித்த திருமண நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்றிருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

அதனை அடுத்து, நிகழ்வு இடம்பெற்ற வீட்டுக்குச் சென்ற பொலிஸார் விருந்தினர்களை அங்கிருந்து செல்ல பணித்தனர்.

அத்துடன், மணமகன், மணமகள் இருவருக்கும் அவர்களுடன் நெருக்கமான உறவினர்களுக்கும் கொவிட் -19 தொற்று பரிசோதனையை முன்னெடுக்க சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அனுமதி கோரப்பட்டது.

அத்துடன், சுகாதாரக்கட்டுப்பாடுகளை மீறி திருமண வைபவத்தை ஒழுங்கு செய்தவர்கள் மீது மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கலும் செய்யப்பட்டது.

அதனால் அவர்களை வரும் 15 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-7-33-19)

# விடுதலைப்புலிகளுடன் தலிபான்களுக்கு தொடர்பு?

# ஆராயும் புலனாய்வுப் பிரிவு

**(கொழும்பு)**

**ஆப்கானிஸ்தானை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ள தலிபான்களுக்கும், அண்மையில் நியூசிலாந்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலிலும், இலங்கையில் உள்ள இலங்கையர்கள் யாராவது தொடர்புபட்டிருக்கின்றார்களா? என்பதை அறிய புலனாய்வுப்பிரிவு விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகிறது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஓய்வு பெற்ற ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**



சிங்கள ஊடகம் ஒன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இதைத் தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

தலிபான்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு தொடர்புகள் இருப்பதாக சில தகவல்கள் வெளியாகி இருந்தன.

அந்த வகையில், தற்போதும், இலங்கையில் உள்ள இலங்கையர்கள் தலிபான்களுடன் தொடர்பில் இருக்கின்றார்களா? என்பது குறித்து ஆராயப்படுகிறது.

இதேபோல், அண்மையில் நியூசிலாந்தில் நடந்த சம்பவத்தில் இலங்கையர் ஒருவர் சம்பந்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இந்த நபருக்கு வேறு ஏதேனும் குழுவுக்கு தொடர்பு உள்ளதா? இலங்கையில் உள்ள எவரேனும் தொடர்புபட்டுள்ளனரா? என்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

இந்தப் பிரச்சினைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுவதாகவும் பாதுகாப்பு அமைச்சும் இந்தப் பிரச்சினைகளை கவனத்தில் எடுத்துள்ளது என்றும் சரத் வீரசேகர மேலும் தெரிவித்தார். (நி-5)

## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்



### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



**பக்தர்களிடம் பேசும் ஏழுமலையான்**

ஏழுமலையான் முன்பு பக்தர்களிடம் நேரில் பேசிக்கொண்டு இருந்தாராம். கலியுகத்தில் பாவங்கள் அதிகரிக்க தொடங்கியது. பின்னர் சீனிவாச பெருமாள் தனக்கு கோவில் கட்டி வழிபட்ட மன்னன் தொண்டைமானிடம், "மன்னவா! கலியுகத்தில் மனிதர்கள் அறிந்தும் அறியாமலும் கொடிய பாவங்களை செய்கின்றனர். பின்பு என்னிடம் வந்து மன்னிப்பு கேட்கின்றனர். அவர்களை காப்பாற்ற முடியாத நிலையில் என்னை இழிந்துரைப்பர். அந்த கஷ்டத்தை இரவும், பகலும் என்னால் தாங்கிகொள்ள இயலாது. ஆதலால் இன்று முதல் கலியுகம் முடியும்வரை யாருடனும் பேசாமல் மௌனமாக சிலை உருவில் இருப்பேன்.

என் உண்மையான பக்தர்களிடம் மட்டும் நான் பேசுவேன் என்று சொல்லி ஆனந்த நிலையை அடைந்து பத்மாவதியை மார்பில் வைத்து கொண்டு 4 கைகளுடன் சங்கு, சக்கரங்கள் இல்லாமல் சிலை உருவானார் என்பது கோவில் தலபுராணம் கூறும் செய்தியாகும்.

இன்றும் ஏழுமலையான் தன்னை தேடிவரும் உண்மையான பக்தர்களிடம் நேரில் பேசுவதாகவும் அவர் அனுமதிக்காவிட்டால் கோவிலுக்குச் செல்ல முடியாது என்பதும் ஐதீகமாக உள்ளது என்று திருப்பதி பட்டாச்சாரியார் ஒருவர் கூறினார்.

**ஸ்ரீநிவாசன் காயத்ரி**
**ஓம் நிரஞ்ஜனாய வித்மஹே**
**நிரா பாஸாய தீமஹி**
**தந்நோ ஸ்ரீநிவாஸ்ப்ரசோதயாத்**

(தொடரும்)

## மற்றொரு திரிபு நாட்டிற்குள் வர வாய்ப்புள்ளது-சுதர்ஷினி

(கொழும்பு)

அமுல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் மூலம் கொரோனாத் திரிபைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தாலும், மற்றொரு திரிபு நாட்டுக்குள் வருவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில், மக்கள் கொரோனாவுடன் வாழப் பழகிக்கொள்ள வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

அத்துடன் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதை விடுத்து, அரசியல் பேதங்களை மறந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்காக ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார். (நி-5)

## மூன்று நாட்களாக எரியும் நாணல் காடுகள்

(கொழும்பு)

சம்மாந்துறை -சவளக்கடை பொலிஸ் எல்லை பகுதிகளில் உள்ள நாணல் காடுகள் கடந்த 3 தினங்களாக எரிந்து சாம்பலாவதாக தெரிவிக்கப்படுகிறது.



ஆற்றுப்படுகையில் மீண்டும் கடந்த காலங்களில் ஏற்பட்டதை போன்று தீ விபத்து ஏற்பட்டதில் நாணல் மூங்கில் சருகு எரிந்து நாசமாகி வருகின்றது.

இதனால் குறித்த பகுதியை சூழவுள்ள சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, மருதமுனை, பெரியநீலாவணை பகுதிகளில் எரிந்த நாணல் கீற்றின் சாம்பல் துகள்கள் விழுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

அப்பகுதியில் தீ கொழுந்து விட்டு எரிந்ததால், ஏராளமான மூங்கில் தட்டு நாணல் உள்ளிட்டவை எரிந்து சாம்பலாகியுள்ளன.

எனினும் அதிகமான பறவைக் குஞ்சுகள் இறந்துள்ளதுடன், பெரியபறவைகள் இதனால் இடம்பெயர்ந்துள்ளன.

மேலும் அப்பகுதியில் உள்ள கிட்டங்கிஆற்றின் மருங்கிலும் இவ்வாறான மூங்கில் சருகு நாணல்கள் காய்ந்து காணப்படுவதுடன், நேற்று முன்தினம் மாலை இப்பகுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# இராணுவ ஆட்சியை எதிர்த்துப் போராட மியன்மார் ஜனநாயக இயக்கம் அழைப்பு

**(நைப்பியிதோ) மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபட வேண் டும் என்று பொதுமக்களுக்கு அந்த நாட்டின் முக்கிய ஜன நாயக ஆதரவு இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.**


இது குறித்து, ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களை உள்ளடக்கிய தேசிய ஒற்றுமை அரசின் இடைக் காலத் தலைவர் டுவா லாஷி லா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிரான 'அவசர நிலையை' பிரகடனப்படுத்துகிறோம். இதையடுத்து, இராணுவ ஆட்சியை எதிர்த்து நாடு தழுவிய போராட்டத்தில் பொது மக்கள் ஈடுபட வேண்டும். நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமம், நகரத்திலும் ஒரே நேரத்தில் இந்தப் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

மியன்மாரில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறி, மக்க ளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த பெப்ரவரி மாதம் 1 ஆம் திகதி கலைத்தது. அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மியின்ட் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையை எதிர்த்து போராட்டம் நடத்தியவர்கள் மீது இராணுவம் அடக்கு முறையைக் கையாண்டதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. போராட்டம் காரணமாக இதுவரை சுமார் 1,000 பேர் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது. (7-4)

# பிரிட்டிஷ் அகாடெமி பரிசு தேர்வில் இந்திய வம்சாவளி எழுத்தாளர்



(லண்டன்)

2021-ஆம் ஆண்டுக்கான பிரிட்டிஷ் அகாடெமி புத்தகப் பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இந்திய வம்சாவளி எழுத்தாளர் மஹ்மூத் மம்தானியின் பெயர் இடம் பெற்றுள்ளது.

இதுகுறித்து பி.டி.ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது,

சர்வதேச கலாசாரப் புரிதலுக்கான பிரிட்டிஷ் அகாடெமி புத்தகப் பரிசுக்குத் தகுதியுடையவர்களின் இறுதிப் பட்டியல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது.

உலகம் முழுவதிலிருந்தும் தேர்வு செய்து இறுதி செய்யப்பட்ட பட்டியலில் 4 எழுத்தாளர்கள் இடம் பெற்றுள்ளனர். அவர்களில், இந்திய வம்சாவளி எழுத்தாளர் மஹ்மூத் மம்தானியும் (வயது 75) ஒருவர்.

இவரது 'நெய்தர் செட்லர் நார் நேட் டிவ்: தி மேக்கிங் அண்ட் அன்மேக்கிங் ஆஃப் பர்மனன்ட் மைனாரிட்டிஸ்' என்ற புத்தகம் பிரிட்டிஷ் அகாடெமி பரிசுக்கான இறுதிப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. (7-4)

# மருத்துவமனைக்குள் புகுந்த வெள்ளம் நோயாளிகள் 16 பேர் பலி

(மெக்சிகோ)

வடக்கு அமெரிக்க நாடான மெக்சிகோவின் தலைநகரில் இருந்து 100 கிலோ மீற்றர் தொலைவில் டவுண்டவுன் டுலோ நகரில் நேற்று முன் தினம் அதிகாலை திடீரென கனமழை பெய்தது.

கனமழை காரணமாக அந்நகரில் உள்ள ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இதனால் டவுண் டவுன் லோ நகரில் உள்ள பொது மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை பிரிவில் ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்த நோயாளிகள் உட்பட 16 நோயாளிகள் மூச்சுத் திணறி பரிதாபமாக உயிரிழ ந்தனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மீட்புக் குழுவினர் மருத்துவமனைக்குள் சிக்கிய எஞ்சிய நோயாளிகளை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். (7-4)

## மெக்சிக்கோவில் நிலநடுக்கம்

(மெக்சிகோ)

மெக்ஸிகோவின் தென்மேற்கில் நேற்று முன்தினம் இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சான் மார்கோஸின் வடமேற்கில் 23 மைல் (37 கிமீ) தொலைவில் 7.4 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் உறுதி செய்தது.

மெக்ஸிகோ தலைநகரின் சில பகுதிகளில் கிட்டத்தட்ட ஒரு நிமிடம் நிலம் அதிர்ந்தது.

சேதம் குறித்த ஆரம்ப அறிக்கைகள் எதுவும் வெளிவரவில்லை. (7-4)

# ஆப்கானில் தலிபான்களின் ஆட்சி ஆரம்பம் போரில் ஆதிக்கம் செலுத்தியவர்களுக்கு பதவிகள்



(காபூல்)

அமெரிக்கா தலைமையிலான கூட்டணி மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கு எதிரான 20 ஆண்டுகால போரில் ஆதிக்கம் செலுத்திய நபர்களுக்கு முக்கிய பதவிகளை வழங்கி, ஆப்கானிஸ்தானின் புதிய அரசாங்கத்தின் தலைவராக ஐ.நா.-ஒப்புதல் பெற்ற முல்லா முகமது ஹசன் அகுந்த் என்பவரை தலிபான்கள் பெயரிட்டுள்ளனர்.

அத்தோடு தலிபான்களின் இணை நிறுவனர் அப்துல் கனி பரதர் துணைத் தலைவராக இருப்பார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்நிலையில், தலிபான் நிறுவனர் மற்றும் தலைவரான முல்லா உமரின் மகன் முல்லா யாகூப் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அதே நேரத்தில் உள்துறை அமைச்சர் பதவி சிராஜுதீன் ஹக்கானிக்கு வழங்கப்பட்டது.

ஆப்கானிஸ்தானின் சிக்கலான இன அமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கத்தை அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இருப்பினும் பெண்கள் உயர் மட்டங்களில் சேர்க்கப்பட வாய்ப்பில்லை.

அத்தோடு மேலும் சில முக்கிய அமைச்சுப் பதவிகளும் இதன்போது வழங்கப்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன. (7-4)



**செவ்வாயை ஆராய்வதற்காக நாசாவால் அனுப்பப்பட்ட பெர்சவரன்ஸ் ரோவர், முதல் முறையாக அங்கிருந்த ஒரு பாறையை குடைந்து வெற்றிகரமாக மாதிரிகளை சேகரித்துள்ளது.**

**இதனை வரலாற்று சிறப்புமிக்க தருணம் என விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இதனை செவ்வாய் கிரக ஆய்வில் ஒரு மைல்கல் என்றும் நாசா கூறியுள்ளது.**

# முதியோர் நல திட்டங்களுக்காக வரி உயர்வு

(லண்டன்)

பிரிட்டனில் முதியோர் நலத் திட்டங்களுக்கு அதிக நிதி திரட்டுவதற்காக வரிகளை உயர்த்த அந்த நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜான்சன் திட்டமிட்டுள்ள தாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், இதற்கான கூடுதல் நிதியைத் திரட்டுவதற்கான திட்டங்களை அவர் பாராளுமன்றத்தில் வெளியிடவிருக்கிறார்.

அதன் ஒரு பகுதியாக, வரியை அதிகரிக்கவும் அவர் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (7-4)

# இந்தோனேசிய சிறையில் தீ விபத்து; 41 பேர் பலி

(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள சிறைச்சாலையில் நேரிட்ட தீ விபத்தில், 41 சிறைக் கைதிகள் பலியாகினர். 39 பேர் காயமடைந்தனர்.

போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்படும் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த தங்கெராங்க சிறைச்சாலையில் நேரிட்ட இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்திவருகிறார்கள்.

ஆயிரம் சிறைக் கைதிகள் மட்டுமே அடைக்கப் போதுமான சிறைச்சாலையில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறைக் கைதிகள் அடைக்கப் பட்டிருந்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. (7-4)

# நாணயமாக பிட்காயின் அறிவிப்பு

(சான்சல்வடோர்)

உலகம் முழுவதும் 'கிரிப்டோகரன்ஸி எனப்படும் வடிவமில்லாத இணைய நாணயமான பிட்காயினை தடை செய்திருக்கிற நிலையில் முதன் முதலில் மத்திய அமெரிக்க நாடான எல்சால் வடார் அதனை நாட்டின் அதிகாரப் பூர்வ நாணயமாக அறிவித்துள்ளது.

முக்கியமாக எல் சால்வடாரில் பெரும்பான்மையான மக்கள் பெரிய வங்கிகளை அணுக முடியாத நிலை நிலவுவதால் பிட்காயின் வருகை நாட்டின் நிதிவளத்தை பெரிய அளவில் உயர்த்தும் என பையு, காயின் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி ஷிவம் தாக்ரல் கூறியுள்ளார். (7-4)

# வாரத்திற்கு 45 மரணங்கள் தொடர்ந்தும் மக்கள் அசமந்தம்

## சுகாதார தரப்பு குற்றச்சாட்டு

(நெளுக்குளம்)

**வவுனியாவில் இம் மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் 45 மரணங்கள் சம்பவித்துள்ள நிலையில் கொரோனா மரணங்கள் தொடர்பில் மக்கள் தொடர்ந்தும் அசமந்தமாக இருப்பதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.**

வவுனியாவில் கொரோனா மரணங்களின் அதிகரிப்பு தொடர்பில் அவர்களிடம் கேட்ட போதே இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த சுகாதார தரப்பினர், வவுனியாவில் கொரோனா மரணங்கள் நாளுக்குநாள் மிக வேகமாக அதிகரித்து செல்கின்றது.

ஒரு வாரத்திற்கு ஒரு மரணம் என இருந்த நிலையில் கடந்த வாரம் 45 மரணங்கள் சம்பவித்துள்ளன. வவுனியாவில் மக்களின் அசமந்தமான செயற்பாட்டால் மரண தொகை கட்டுக்கடங்காமல் செல்கின்றது. எனினும் மக்கள் இதன் பாரதூரமான தன்மையை உணரவில்லை. இது பாரிய ஆபத்தான நிலைப்பாடாக உள்ளது. இதேவேளை தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் மக்கள் ஒன்றுகூடுவதை தவிர்த்து சமூக இடைவெளியைப் பின்பற்றுங்கள். மக்கள் அதிகளவில் ஒன்றுகூடுவதானது தடுப்பூசி வழங்கும் நிலையங்களில் புதிய கொரோனா கொத்தணிகளை உருவாக்கிவிடலாம்.

வவுனியா மக்களுக்கு தேவையான தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளதால் அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படும் என்பதை மனதில் கொண்டு ஒரே தடவையில் ஊசி ஏற்றும் நிலையங்களில் கூடுவதை தவிர்க்குமாறும் தெரிவித்தனர். (7-4-6-299)

# மயான அபிவிருத்தி பணிக்கு அடிக்கல் நாட்டல்



(மன்னார்)

மன்னார் நகர சபையால் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் பொது மயான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு மன்னார் நகர சபை தலைவர் ஞா. அன்ரனி டேவிட்சன் தலைமையில் மன்னார் பொது மயான பகுதியில் நேற்று காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது.

இதில் அஞ்சலி மண்டபம், கிரியைகள் மண்டபம், நடை பாதைகளுக்கான கற்கள் பதித்தல் பிரார்த்தனை மண்டப திருத்த வேலைகள் மற்றும் மலசல கூடங்கள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

(7-4-6-285)

# சந்தை திறக்க அனுமதி மறுப்பு

(தர்மபுரம்)

தற்பொழுது நாட்டில் பயணத்தடை அமுல்படுத்தப்பட்டிருக்கும் நிலையில் கரைச்சி பிரதேச சபைக்குட்பட்ட தர்மபுரம் சந்தை முற்றாக மூடப்பட்டுள்ளது.

3 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள புதுக் குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட சந்தை ஒன்றில் முழுமையான வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றுவரும் நிலையில் தர்மபுரம் சந்தை மட்டும் திறப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

நாடு முடக்கப்பட்டுள்ள நிலையில் மரக்கறி வியாபாரத்தில் கிடைக்கும் வருமானத்தில் வாழ்நாளை நடத்தி வரும் பல குடும்பங்களின் நிலை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என தர்மபுரம் சந்தை வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (7-4-316)

# உயர் கல்விக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் பிரதேசத்திலிருந்து பேராதனைப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான தமிழினி நந்தகுமார் என்ற மாணவி மேற்படிப்பைத் தொடர்வதற்குத் தேவையான உதவிகள் குறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு சார்பில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

மேலும் கோணாவில் பிரதேச கிராம உத்தியோகத்தரும் இதற்கு பரிந்துரை செய்துள்ளார்.

இந்த நிலையில், இந்த மாணவி தனது உயர் கல்வியைத் தொடர்வதற்குத் தேவையான உதவிகளை "கிளிஅபிவிருத்தி பொருளாதார சமூக கலாசார மேம்பாட்டு பேரவை" ஊடாக வழங்குவதாக மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் உறுதியளித்துள்ளார். (7-4-6)






வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 8 நிலையங்கள் ஊடாக 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டது. அதன்படி வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்தியர் பிரசன்னா தலைமையில் தோணிக்கல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 60 வயதிற்கு மேற்பட்ட 473 பேருக்கு இரண்டாவது டோஸ் சினோபாம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டது. (படம் - வசந்தரூபன்)

# கிடைக்கப் பெற்ற நிதியினைக் கொண்டு குடமுருட்டிக் குள புனரமைப்பு ஆரம்பம்

## கிளி.மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர்



(அக்கராயன்)

கிளிநொச்சி பூநகரி குடமுருட்டிக் குளத்தில் முக்கிய வேலைகள் நடைபெற்று வருவதாக கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனப் பொறியியலாளர் ரிரிசியந்தன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ரூபா.7 மில்லியன் நிதி செலவில் அணைக்கட்டில் முக்கிய வேலைகளை முன்னெடுத்து உள்ளோம். இதன் மூலம் அணைக்கட்டினை மழை காலத்தில் பாதுகாக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை குடமுருட்டிக் குளத்தினை முழுமையாக புனரமைப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பயிர்ச் செய்கைக் கூட்டங்களில் விவசாயிகள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் பெருமளவு நிதி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கிடைக்காததன் காரணமாக கிடைக்கின்ற நிதியில் முக்கியமான வேலைத் திட்டங்களை குடமுருட்டியில் முன்னெடுத்து உள்ளனர்.

குடமுருட்டிக் குளம் முழுமையாக புனரமைக்கப்படும் போது கூடுதலான நீரினை சேமிக்க முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

(7-4-6-350)



கரைதுறைப்பற்று பிரதேச சபையின் புதிய உப தவிசாளர் தெரிவு நேற்று முன்தினம் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் இடம்பெற்றது. புதிய உபதவிசாளராக மரியநாயகம் - தொம்மைப்பிள்ளை போட்டி இன்றி தெரிவு செய்யப்பட்டார். (படம் - கிருஷ்ணகுமார்)

# 4200 ஒக்சிமீற்றர்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட 4200 ஒக்சி மீற்றர்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பொருட்கள் இறக்குமதி முனையத்தில் சுங்க அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இவற்றின் பெறுமதி 2.3 மில்லியன் ரூபாய் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (நி-5)

# மேலும் 674 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் நேற்று புதன்கிழமை காலை 6 மணியுடன் நிறைவடைந்த24 மணித்தியாலயத்தில் 674 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கடந்த ஆண்டு ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இது வரையில் 67,342 பேர் தனிமைப்படுத்தல் விதிகளை மீறியமை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யாத ஆலைகளை சுற்றி வளைத்து கைப்பற்றுங்கள்

## ஜனாதிபதி அதிரடி உத்தரவு

(கொழும்பு)

அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாட்டு விலையில் அரிசியை விற்பனை செய்யாத நெல் ஆலை உரிமையாளர்களின் களஞ்சியசாலைகளை சுற்றிவளைத்து கைப்பற்றுமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அவசரகால விதிமுறைகளின் கீழ், அவ்வாறு கைப்பற்றியவற்றை கட்டுப்பாட்டு விலையில் சந்தைக்கு விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி, அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் அரிசி நெருக்கடி பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு எழுப்பப்பட்ட பிரச்சினைகளை கருத்தில் கொண்ட ஜனாதிபதிஇந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அரசாங்கம் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்த போதிலும், சந்தையில் அரிசியின் விலை குறையவில்லை என்று பல அமைச்சர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதன்படி, நுகர்வோர் விவகார ஆணையம், அத்தியாவசிய சேவைகள் ஆணையர் நாயகம் மற்றும் உணவுத் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்தாலோசித்து உடனடித் திட்டத்தை உருவாக்குமாறு வர்த்தகஅமைச்சருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

அரிசி மற்றும் சீனிக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்கும் வர்த்தமானி அறிவிப்பையும் அரசாங்கம் அண்மையில் வெளியிட்டது, ஆனால் சீனி விலை ஓரளவு குறைந்த போதிலும் அரிசியின் சந்தை விலை குறையவில்லை என நுகர்வோர் கூறுகின்றனர்.



இந்நிலையில் அரிசி சந்தையை கட்டுப்படுத்தவும், கட்டுப்படுத்தப்பட்ட விலையில் அரிசியை விற்காத பெரிய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களின் அரிசியை கொள்முதல் செய்து சந்தைக்கு வெளியிடுமாறும் வர்த்தக அமைச்சருக்கு ஜனாதிபதிஉத்தரவிட்டார்.

அதற்கமைய உடன் நடைமுறைக்கு வரும் வகையில் பொலநறுவை மற்றும் முக்கிய பல இடங்களில் சுற்றி வளைப்புகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இலங்கைப் பயணத்தை தவிருங்கள்

(கொழும்பு)

கொரோனாத் தொற்று அதிகரித்துவரும் நிலையில் இலங்கை, ஜமைக்கா மற்றும் புருனே ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்யக்கூடாது என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மேற்கண்ட மூன்று நாடுகளிலும் 4 ஆம் நிலையில் இருப்பதனால் அங்கு செல்வதை தவிர்க்குமாறு அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அறிவுறுத்தியுள்ளது. (நி-5)

# வலம்புரிச் சங்குடன் ஒருவர் கைது

(கொழும்பு)

ரிதிகம பொலிஸ் பிரிவில் ரம்படகல்ல பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையின் குருணாகலை முகாமினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இரு வலம்புரி சங்குகள் மற்றும் முத்து ஒன்று என்பவற்றுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த சந்தேகநபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## யாழ்ப்பாணம் நவீனசந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கானவிலைமனுக் கோரல்

1. யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் கீழ்வரும் நிலப்பகுதிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| நிலப்பகுதி | தரைப்பிரதேசம் (சதுரஅடி) | அடிப்படைவிலை (ரூபா) | மாதாந்தவாடகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|---|
| A | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 |
| B | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 |

2. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடியஅடிப்படைவிலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளை கருத்தில் கொள்ளவேண்டும்.
I. தங்களின் தேவைக்கேற்ற வகையில் அப்பகுதியை மாற்றியமைக்கமுடியும். (கூரைதிருத்த வேலைமட்டும் மாநகரசபையால் மேற்கொள்ளப்படும்)
II. ஒப்பந்தகால முடிவில் எந்தவித நிபந்தனையுமின்றி மாநகரசபைக்குகையளித்தல் வேண்டும்.
III. தங்களது வியாபாரத்தின் தன்மைக்கேற்ப கழிவகற்றும் செயற்பாட்டிற்குவசதியாக வரைபடத்தில் Open to Sky எனக்குறிப்பிடப்பட்டபகுதியில் தங்களது சொந்த செலவில் கழிவகற்றும் தொட்டியை அமைக்க முடியும். அத் தொட்டியில் சேர்க்கப்படும் கழிவை கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளலாம். தங்களது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தின் பராமரிப்பு பணிகள் தங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை,மீளளிக்கப்படாத ரூபா2000/= இனை செலுத்திமாநகரசபையின் நானாவித இறைவரிப் பகுதியில் **2021.09.10ம் திகதி முதல் 2021.10.30 ம் திகதி வரை**வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பிப 2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணை முறியாக செலுத்துதல் வேண்டும்.
6. விலைமனுக்களை **ஆணையாளர்,மாநகரசபை,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்/ நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களைஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால் உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஏற்றல் **2021.10.01ம் திகதி பி.ப2.30** மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகரசபையின் பௌதீகதிட்டமிடல் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமூகமளிக்கலாம்.குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. இது பற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகரசபை நானாவித இறைவரிப் பகுதியின் 021 221 5978 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணிமுதல் பிப3.00 வரை நேரில் தகவல்களைபெற்றுக் கொள்ளலாம்.

(சி-2629)

தலைவர்,
பெறுகைக்குழு , யாழ்ப்பாணம் மாநகரசபை


# நாட்டை தொடர்ந்தும் மூடி வைத்திருக்க முடியாது

## அஸ்கிரிய பீடம் தெரிவிப்பு

(கொழும்பு)

கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை தொடர்ந்தும் மூடி வைத்திருக்க முடியாதென அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் சங்கைக்குரிய வரக்காகொட ஸ்ரீ ஞானரத்தன தேரர் தெரிவித்தார்.நேற்று முன்தினம் அஸ்கிரிய விகாரையில் நடைபெற்ற நிகழ்வின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த மகாநாயக்கர், நாட்டை தொடர்ந்து மூடும் பட்சத்தில் பொருளாதாரத்தின் மீது தாக்கம் ஏற்படும். எனவே நாட்டை விரைவாக மீண்டும் திறக்க வேண்டுமானால் அரசாங்கத்திற்கும் சுகாதாரத்துறையினருக்கும் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியம். இதன்மூலம் கொவிட் 19 பெருந்தொற்றைத் தோற்கடித்து மீண்டும் வெற்றியுடன் நிமிர்ந்து நிற்கலாமென அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் குறிப்பிட்டார். (நி-5)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## 35வது பொதுப் பட்டமளிப்பு (பகுதிII) விழாவைப் பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டங்களையும், தகைமைச் சான்றிதழ்களையும் வழங்குவதற்கென எதிர்வரும் 2021 செப்டம்பர் மாதம் 16,17ம் திகதிகளில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியினை நாட்டின் தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை காரணமாக எதிர்வரும் 07 ஆம் 8 ஆம் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை தொடருமாயின், மாற்று ஏற்பாடாக பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் (Virtual) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 2021-10-07ஆந் திகதி நடாத்துவதற்கும், நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.பட்டமளிப்பு விழாத்தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்

(சி-2630)

# இரண்டு வாரங்களில் இறப்பு வீதம் குறையும்

## ரமேஷ் பத்திரண தெரிவிப்பு

**(கொழும்பு)**

**அடுத்த இரண்டு வாரங்களில் நாட்டில் கொரோனா தொற்று மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை குறையும் என அமைச்சரவை பேச்சாளர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் இம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதை குறிப்பிட்டார். மிகவும் வெற்றிகர மான தடுப்புசி திட்டம்மூலம், தற்போது நோயாளிகளின் பரவலில் சிறிது குறைவு ஏற்பட்டுள்ளது.

சுமார் 9.5 மில்லியன் மக்கள் தடுப்பூசியின் இரண்டாவது அளவைப் பெற்றுள்ளனர்.

அடுத்த இரண்டு வாரங்களில் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முழுமையாக தடுப்புசி போடப்பட்டு விடும்.

இதையடுத்து அவர்களின் உடலில் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கப்பட்டு, அதன´மூலம் பிறருக்கு நோய் பரவுதல் குறைவடைந்து நோயாளிகளின் எண்ணிக்கைமற்றும் இறப்புகளைகணிசமாகக் குறைக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என அமைச்சர் தெரிவித்தார். (நி-5)

# எலிக் காய்ச்சலால் 2 வருடங்களில் 204 பேர் மரணம்

(கொழும்பு)

எலிக் காய்ச்சலால் இலங்கையில் பலர் உயிரிழந்து வருகின்றனர். குறிப்பாக 2019ஆம் ஆண்டு 100 பேரும், 2020ஆம் ஆண்டு 104 பேரும் உயிரிழந்துள்ளனர் என இராஜாங்க அமைச்ச் சன்ன ஜயசுமன தெரிவித்தா்

பாராளுமன்றத்தின் நேற்று முன்தின அமர்வில் கலந்துக்கொண்டு வாய் மூல விடைக்கான வினாவை முன்வைத்து உரையாற்றும்போதே



அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், எலிக் காய்ச்சல் ஏற்பட்ட நோயாளர்கள் தொடர்பான தகவல்கள் அந்த நோயாளரின்பிர தேசத்துக்குப் பொறுப்பான சுகா தார வைத்திய அதிகாரிக்கு வழங்கப்படும். இவர்கள் நோயாளரின் வீட்டுக்கு சென்று எவ்வாறு அந்த நோய் பரவியது என்பது தொடர்பில் ஆராய்வார்கள்

மேலும் எலிக் காய்ச்சலுக்கான நோய் அறிகுறிகளைக் கொண்டவர்கள் நோயாளரின் வீடில் இருந்தால் அவர்களுக்கு தேவையான சிகிச்சையளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். (நி-5)

# 80 இற்கு மேற்பட்ட பிரபலங்கள் இதுவரை கொரோனாவால் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக் காரணமாக இதுவரையில் 10, 504 பேர் உயிரிழந்துள்ளதாகஅரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையின்பிரகாரம் கடந்த திங்கட்கிழமை 184 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் கொரோனா தொற்றினால் இதுவரையில் 471,863 பேர்பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 388,278 பேர் பூரண குணமடைந்துள்ளதாகவும் அரசாங்கத்தகவல் திணைக்களம் வெளியிட்டள்ள அறிக்கையில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், பணக்கார தொழிலதிபர்கள், தொழில் வல்லுநர்கள், பிரபுக்கள் மற்றும் கலைஞர்கள் உட்பட 80 இற்கும் மேற்பட்ட பிரபலமானவர்கள் உயிரிந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் நடிகர்கள் மற்றும் பாடகர்கள் உட்பட கிட்டத்தட்ட 300 கலைஞர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக பிரபல தொழிலதிபர் கப்பிடல் மஹா ராஜா, மூத்த அரசியல்வாதி மங்கள சமரவீர மற்றும் பாடகர் சுனில் பெரேரா ஆகியோர் உயிரிழந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

அத்துடன் இதுவரையில் 27 அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்றஉறுப்பினர்கள் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையினரின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி-5)

# இன்று ஒரு தகவல்

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

## செயற்கை இரத்தப்பொடி

"இந்த இருபதாம் நூற்றாண்டிலே எது ரொம்ப கஷ்டமான காரியம்?" என்று கேட்டார் ஒருத்தர். ஒருத்தருக்கொருத்தர் சண்டை போடாமல் இருக்கிறது தான் இப்போது ரொம்பவும் கஷ்டமான காரியம் என்று தோணுகிறது.

ஒரு நாட்டுக்கும் இன்னொரு நாட்டுக்கும் சண்டை... நாட்டுக்குள்ளேயே ஒரு குரூப்புக்கும் இன்னொரு குரூப்புக்கும் சண்டை. ஏன் சண்டை போட்டுக்கிறீங்கள் என்று கேட்டுப்பாருங்கள்! நாங்கள் சமாதானத்திற்காகத்தான் சண்டை போடுகிறோம் என்பார்கள்.

வாழ்கிறதிற்காக பிறந்த மனிதன் இலட்சியத்துக்காக உயிரை விடத் தயார் என்று சொல்லிக்கொண்டிருப்பான். அப்படி உயிரை விடுகிறவங்களை நாமும் பாராட்டுகின்றோம். ஆனால் ஒன்று இல்லாத விடயங்களுக்கெல்லாம் சண்டை போடுகிறவர்களையும் உயிரை விடுகிறவர்களையும் என்ன என்று சொல்கிறது.

யுத்தங்களினாலும் சண்டைகளாலேயும் நாம் அடைவது என்ன என்கிறது ஒரு பக்கம் இருக்கட்டும். இழக்கிறது என்ன தெரியுமா? ஏராளமான உயிர்கள்! இரத்தம் சிந்த நான் தயார் என்று மார்தட்டி சொல்லலாம். ஆனால் இரத்தம்சிந்தினால் உயிர்காத்துக்கொண்டிருக்க தயார் இல்லை!

இழக்கிற இரத்தத்தை ஈடுகட்டினால் தான் உயிரைக் காப்பாற்ற முடியும். அதனாலே இது சம்பந்தமான ஆராய்ச்சி செய்கிறது கட்டாயம் ஏற்படுகிறது. அதனுடைய விளைவாக புதுசா ஒன்றை கண்டுப்பிடித்திருக்கார்கள். அது தான் செயற்கை இரத்தப்பொடி. திடீர் சாம்பார் பொடி, திடீர் ரசப்பொடி, திடீர் காப்பிப் பொடி இப்படி எல்லாம் சொல்கிறோமேல்லோ! அது மாதிரி இது திடீர் இரத்தப் பொடி.

இஸ்ரேல் சின்ன நாடு. மக்கள் தொகை குறைச்சல். அதோடு போர்கள் வேறே! அதனாலே காயப்பட்டவர்களை காப்பாற்றியே தீர வேண்டிய கட்டாயம். காப்பாற்ற வேண்டும் என்றால் இரத்த இழப்பை தடுக்கவேண்டும். அப்படி என்வென்றால் உடனடியாக புது இரத்தம் செலுத்தியாக வேண்டும்.

திடீர் என்று இரத்தம் வேண்டும் என்றால் எங்கே போறது. அதுவும் கிடைகின்ற இரத்தம் சேர்கிற குரூப்பாக இருக்க வேண்டும். ஒரு வேடிக்கை பார்த்தீங்களா? நான் வேறே குரூப்பு நீ வேறு குரூப்பு என்று இவன் சண்டை போடுகிறான். இதிலே அடிப்பட்டவனுக்கு இரத்தம் கொடுக்கப்போனால் அதிலேயேயும் அது வேறே குரூப்பு இது வேறே குரூப்பு என்று சொல்லிக்கொண்டிருக்கார்கள்.

எந்த குரூப் இரத்தம் வேண்டுமோ அது உடனடியாக கிடைக்கவில்லை என்றால் என்ன செய்வது? இதற்காகத் தான் விஞ்ஞானிகள் இந்த இரத்தப் பொடியை கண்டுப்பிடித்திருக்கிறார்கள். ஒரு ஆள் அடிப்பட்டுட்டானா? அவனுக்கு இரத்தம் கிடைக்கவில்லையா? உடனே என்ன செய்யலாம்? சுத்தப்படுத்தப்பட்ட தண்ணீரை எடுத்து கொள்ள வேண்டியது. அதிலே இந்த இரத்தப் பொடியை கரைக் வேண்டியது. இப்போது செயற்கை இரத்தம்தயார். இதை அந்த ஆள் உடம்பிலே ஏத்திவிட வேண்டியது தான்!

இயற்கையாக நம் உடம்பிலே இருக்கிற இரத்தம் என்ன வேலை செய்கிறது? ஒட்சிசனை உடம்பிலே எல்லா இடத்திற்கும் எடுத்துக் கொண்டு போகும். அந்த வேலையை அந்த செயற்கை இரத்தமும் செய்கிறது. ஆனால் ஒரு விடயம் இந்த செயற்கை இரத்தம் ஒரு அவசரத்திற்கு தான். ஒரு முதலுதவி மாதிரி.

அதை அப்படியே நிரந்தரமான விட்டுவிட முடியாது. பின்னாடி தேவையான குரூப் உண்மையான இரத்தத்தை செலுத்த வேண்டியிருக்கும். உண்மையான இரத்ததை 20 இலியிருந்து 40நாள் வரைக்கும்தான் பாதுகாக்க முடியும். அதுவும் குளிர் பதனப்பெட்டியிலே! அதற்குள்ளே உபயோகப்படுத்தவில்லை என்றால் அது வீணாகப் போயிடும்.

இந்த இரத்தப்பொடி அப்படி இல்லை! எவ்வளவு நாள் வேண்டும் என்றாலும் அப்டியே வைத்திருக்கலாம். குளிர்பதனப் பெட்டியும் தேவையில்லை. ஆனால் ஒன்று! இதை தண்ணீரிலே கலந்து செயற்கை இரத்தமாக ஆக்கிவிட்டால் அதனுடைய வலு 72 மணி நேரம். அதாவது மூன்று நாள். அதற்குள்ளே அந்த ஆசாமியை தூக்கிக்கொண்டுப் போய் உண்மையான இரத்ததை கொடுக்க வேண்டும்.

சண்டையிலே அடிபடுகிறவர்கள், சாலை விபத்திலே அடிபடுகிறவர்கள் இவர்களையெல்லாம் அவசரத்திறகு கை கொடுத்து உதவுவது இந்த செயற்கை இரத்தப் பொடி! அதற்குப்பிறகு நாம் கொடுக்கிற இரத்தம் தான் அவர்களை காப்பாற்ற வேண்டும். இன்றைக்கு இரத்ததை தானமாக கொடுக்க தயாராக இருக்கிற நல்ல உள்ளங்கள் ஏராளம்.

எவ்வளவு ஆக்ஸிடெண்ட், ஆப்ரேஷன். இதிலே சம்பந்தப்பட்டவர்களை காப்பாற்றுகிறது நாம் கொடுக்கிற இரத்தம் தானே! ஒரு ஆக்ஸிடெண்ட். ஒரு ஸ்கூட்டர் ஒரு ஆள் மேலே மோதிட்டு சேர். "பார்த்து வரக்கூடாதா?" என்றான் அந்த ஆள்.

"நீ தான் பார்த்து நடக்க வேண்டும். ஏன்னென்றால் 20வருடமாக நான் ஸ்கூட்டர் ஓட்டிக்கொண்டிருக்கிறேன்". என்றான் இவன். இதற்கு அவன் "நீ தான் பார்த்து ஓட்ட வேண்டும். ஏன்னென்றால் 40 வருடமாக நான் நடந்துக்கெண்டிருக்கிறேன்". என்றான் இவன். இது எப்படி?



# சிறுவர் அரங்கம்

## சிங்கம்- அசிங்கம்



நரிதன்னுடைய இருப்பிடத்திற்கு செல்லும் வழியில் கரடி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்களைச் சந்தித்தது.

நரி அந்த மிருகங்களிடம் சிங்கம் அது தன்னுடைய முழுப் பலத்தையும் இழந்து விட்டது என்று அதன்வாயாலேயே சொன்னது என்றும் வேண்டுமானால் புலியிடம் கேட்டுப் பாருங்கள் என்றது.

புலியும்தற்செயலாக அவ்வழியே வந்தது. கரடி, சிறுத்தை, ஓநாய் ஆகியோர் புலியிடம் நரி சொல்வது உண்மையா?என்று கேட்டன.

புலியும் அதற்கு ஆமாம் தானும் நரியும் சிங்கத்தை சந்திப்பதற்காக சென்றபோது சிங்கம் அதன்வாயாலேயே தன்னுடைய மனைவி இறந்த பின் தன்னுடைய பலம் அனைத்தையும் இழந்து விட்டதாக சொன்னது என்று புலி மற்ற மிருகங்களிடம்கூறியது.

இதைக்கேட்டவுடன் மற்ற மிருகங்களுக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை.

ஏனென்றால் சிங்கத்தின் பலத்தை வைத்து தான் காட்டில் உள்ள மற்ற மிருகங்கள் அதற்கு பயந்து மரியாதை கொடுத்தன.

ஆனால் சிங்கமே தன்னுடைய பலம் அனைத்தையும் தான் இழந்து விட்டதாக ஒப்புக் கொண்டதால் தாங்கள் இனி சிங்கத்திற்கு பயப்பட வேண்டாம் என்று புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலான மிருகங்கள்தங்களுக்குள் பேசிமுடிவெடுத்தன.

நான்கு நாட்கள் கழித்து புலி, கரடி, நரி, சிறுத்தை, ஓநாய் முதலிய மிருகங்கள் சிங்கம் அதன் குகைக்கு செல்லும் வழியில் உள்ள ஒரு மரத்தடியில்நின்று பேசிக் கொண்டிருந்தன. (தொடரும்)

# மகாபாரதம்




சுற்றம் அல்லாதாரும் துன்பம்தருவர். ஆனால் மன்னனுக்கு அவமதிப்பு நேர்ந்தால், அவனைச் சார்ந்த சுற்றத்தார்பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

ஆதலால் சுற்றத்தாரிடம் குணம், குற்றம் இரண்டும் காணப்படுகின்றன.

சுற்றம் இல்லாதவன் மகிழ்ச்சியும், பெருமையும் அடைய மாட்டான். எனவே, சுற்றத்தாரைச்சொல்லாலும், செயலாலும் எப்போதும் கௌரவப்படுத்த வேண்டும். அவர்கள் விரும்புவதைச்செய்ய வேண்டுமேயன்றிவெறுப்பதைச் செய்யக் கூடாது.

அவர்களிடம்நம் உள்ளத்தில் நம்பிக்கையில்லாதிருந்தாலும் எப்போதும்நம்பிக்கை உள்ளவன் போல நடந்து கொள்ள வேண்டும்.

குணமோ,குற்றமோ உறுதியாக அவர்களிடம் தீர்மானிக்க முடியாது. இவ்விதம் பகைவர், நண்பன், சுற்றத்தார் ஆகியோரிடம்விழிப்புடன் நடந்து கொள்ளும் மன்னன்நீடுபுகழ்பெற்று திகழ்வான்" என்று உரைத்தார் பீஷ்மர்.

### குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

தருமர் பீஷ்மரை நோக்கி "ஒருவரோ டொருவர் பொறாமை கொண்டுள்ள சுற்றத்தாரைத் தன் வசமாக்கிக் கொள்ளத்தக்க வழிகள் யாவை" என வினவினார்.

அதற்கு பீஷ்மர், "இந்த விடயத்தில் நாரதருக்கும், வாசுதேவருக்கும் நடந்த உரையாடலைக் கூறுகிறேன், கேள். கண்ணபிரான் நாரதரை நோக்கி "நாரதரே... பண்டிதன் அல்லாத நண்பனும், பண்டிதனாக இருந்தும் அறிவற்ற பகைவனும் இரகசியத்தை அறியத் தக்கவரல்லர்.

ஆதலால் உம் மேன்மையை அறிந்துகொண்டு நான் உம்மிடம் என் இரகசியத்தைத் தெரிவித்துச் சில உண்மைகளைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

நான் அரசன் என்ற பெயர்உள்ளவனாக இருந்தும் சகோதரர்களுக்கு அடிமைத் தொண்டு செய்து வருகிறேன். புசிக்கத் தக்கவற்றுள் பாதியை மட்டும் புசிக்கிறேன்.

மற்றொரு பாதியைச் சுற்றத்தாருக்குத் தருகிறேன். அவர்கள் பேசும் சொற்கள் என்னை சுட்டெரிக்கின்றன. எனக்குத் துணை செய்வார் யாரும் இல்லை. அச்சுற்றத்தாரோடு சேர்ந்திருக்கவும்முடியவில்லை, விட்டு விலகியிருக்கவும்முடியவில்லை.

(தொடரும்)

கிடைத்திருக்கும் வாய்ப்புகளைத் திறம்படப் பயன்படுத்துகிறவனே உண்மையான பெருமைக்கு சொந்தக்காரன். -திவேடர் குல்வெல்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனாவால் இறந்தவர்களின் உடலை விறகால் எரியூட்ட முடியாதா?

கொரோனாத் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கை கேட்போர் மனங்களைப் பதற வைக்கிறது.

அந்தளவுக்கு கொரோனா மரணம் அதிகரித்து வருகிறது.

இந்த அவலநிலை குறித்து யாழ் போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் இளம் மருத்துவர் ஹரீஸ்வரன் தனது முகநூலில் பதிவேற்றம் செய்திருந்தார்.

அவர் முன்வைத்த கருத்துக்கள் பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது மட்டுமன்றி, கொரோனாத் தொற்றால் தினந்தோறும் ஏற்படுகின்ற மரணங்கள் ஏற்படுத்திய ஆற்றாமையும் அதற்குள் வெளிப்பட்டு நிற்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றால் இறப்பவர்களின் உடலங்களை மின் தகனம் செய்ய வேண்டும் என்பதற்காக அவற்றை வைத்தியசாலையில் பல நாட்களாக வைத்திருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் உடலை வைத்தியசாலையில் பல நாட்களாக வைத்துப் பராமரிப்பதென்பது சாதாரண விடயமல்ல.

தவிர, அவ்வாறு தகனம் செய்யாமல் உடலை வைத்திருப்பதால் இறந்தவரின் உறவுகளும் மனஉளைச்சலுக்கு ஆளாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

எனவே கொரோனாத் தொற்றால் இறந்தவர்களை மின் தகனம் செய்ய முடியாத நிலைமை ஏற்படும்போது விறகு மூலமாகவோ அன்றி எரிவாயு மூலமாகவோ எரியூட்டுகின்ற ஏற்பாட்டைச் செய்வது பற்றி யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகமும் யாழ். மாநகர சபை நிர்வாகமும் கவனம் செலுத்த வேண்டும்.

விறகு மூலமாக அன்றி எரிவாயு மூலமாக எரியூட்டும்போது தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவது பொருத்துடையதாக இருக்கும்.

இந்தியாவில் கொரோனா மரணங்கள் அதிகரித்தபோது இறந்தவர்களின் உடலங்களை விறகு வைத்தும் எரிவாயு மூலமாகவும் எரியூட்டியமை இங்கு நினைவுபடுத்தற்குரியது.

தவிர, கொரோனாத் தொற்றால் இறந்தவர்களின் உடலை விறகு மூலம் எரியூட்டுவது பாதுகாப்பான முறையன்று என யாரேனும் வாதிடுவார்களாயின்,

கொரோனாத் தொற்றால் இறந்தவரின் உடலை மயானத்துக்கு எடுத்துவரும்போது எவ்வாறான பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்பது பற்றிய கேள்விகள் எழுகை பெறும்.

ஆகவே கொரோனாத் தொற்றால் இறந்தவரின் உடலையும் ஏனைய நோய்கள் காரணமாக இறந்தவரின் உடலையும் ஒன்றாக வைத்திருப்பதைவிட, கொரோனாவால் உயிரிழந்தவரின் உடலை விறகு கொண்டு எரியூட்டுவது சாலச் சிறந்தது என்பதால் இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு நீண்ட அறிக்கையை அனுப்பியது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவைக்கு தமிழர் தரப்புக் குரலாக ஆங்கில மொழி மூலமான நீண்ட அறிக்கை ஒன்றை நேற்றுப் புதன்கிழமை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி அறிக்கையில்,

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கையைப் பாரப்படுத்துவதே தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கான ஒரே வழி.

காணாமல்போனோருக்கான அலுவலகம் என்பது இலங்கை அரசின் வெறும் ஏமாற்றுத் தந்திரமே.

தொடரும் அடக்குமுறைகளைக் கண்காணிக்க மனித உரிமை ஆணைக்குழு ஒரு விசேட தூதுவரை நியமிக்க வேண்டும்.

வடக்கு- கிழக்கில் மனிதஉரிமை ஆணையகத்தின் ஒரு கள அலுவலகம் திறக்கப்பட்டுத் தொடரும் அடக்குமுறைகள் கண்காணிக்கப்பட வேண்டும்.

இராணுவமயமாக்கல் பல்வேறு பரிணாமங்களில் நடந்து தமிழ் மக்களின் இருப்பு தற்போதும் கேள்விக்கு உள்ளாக்கப்படுவது குறித்து ஐ. நா. பிரேரணை கவனத்தில் எடுக்காமை மிகுந்த கவலைக்கு உரியது. இது குறித்து ஐ. நா. கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையில் நடைமுறை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஒரு ஆரம்பப் புள்ளியாகக்கூட கருதப்பட முடியாதது.

இலங்கை பல்தேசக் கட்டமைப்புக் கொண்ட நாடாக உருவாகக்கூடிய தமிழர்களின் தமிழ்தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் ஒரு அரசியலமைப்பு மூலமே தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்கும் உள்ளிட்ட பல விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. (ம-18)

## இலங்கைக்கு பயணம் செய்வதனை தவிருங்கள்

### தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதனால் இலங்கைக்கு பயணம் செய்வதனைத் தவிர்க்குமாறு தனது நாட்டு மக்களுக்கு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

கோவிட் -19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் இலங்கை, ஜமைக்கா மற்றும் புருனே ஆகிய நாடுகளுக்கு பயணம் செய்யக்கூடாது என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்கள் எச்சரித்துள்ளன.

அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையத்தின் கூற்றுப்படி மேற்கண்ட மூன்று நாடுகளிலும் கொரோனா நிலை 4 ஆக உயர்வடைந்துள்ளதால், அமெரிக்கர்கள் குறித்த நாடுகளுக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளது. (ம)

## வீட்டில் கசிப்பு உற்பத்தி கோப்பாயில் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

வீட்டில் கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாயைச் சேர்ந்த 35 வயதுடைய பெண் ஒருவரே நேற்று யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து 2 லீற்றர் கசிப்பு, 5 லீற்றர் கோடா என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப் பட்டுள்ளார். இவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.(ம-33)


## தவறவிட்டவர்கள் தடுப்பூசியை பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான 2 ஆம் கட்ட தடுப்பூசிசெலுத்திக்கொள்ளத் தவறியவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு நாளை முதல் இடம்பெறவுள்ளது.

ஏற்கனவே கோவிட் முதலாவது தடுப்பூசியைப் பெற்று இரண்டாவது தடுப்பூசிக்காக காத்திருப்பவர்களும் உரியகாலத்தில் இரண்டாவது தடுப்பூசி செலுத்தத் தவறியவர்களுக்காகவும் யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 2 ஆவது கோவிட் (சினோபார்ம்) தடுப்பூசி செலுத்தும் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை மற்றும் மறுநாள் சனிக்கிழமை ஆகிய இரு தினங்களில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலின் லட்சுமி நாராயணன் மண்டபத்தில் காலை 7.30 மணிமுதல் இடம்பெறவுள்ளதாக யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அறிவித்துள்ளது. (ம)

## சத்திய தரிசனம்



### பிரமாண்ட லிங்கம்

- நீ வெளிச்சத்தை நோக்கி நகர்ந்தால் நிழல் பின்னால் விழும். வெளிச்சத்துக்கு எதிராக நகர்ந்தால் நீ நிழலைப் பின்பற்ற வேண்டியதாகும்.
- ஒவ்வொரு கணமும் பகவானை நோக்கி அடியெடுத்து வை. அப்போது மாயையென்னும் நிழல் (அஞ்ஞானம்) பின்னே சரியும், உன்னை மயக்காது.
- உறுதியாக இரு, திடசங்கல்பத்தோடு இரு, தவறு செய்யாதே, தப்பான அடி எடுத்து வைத்துவிட்டுப் பின்னர் வருந்தாதே!
- முதலில் தாபம் (சிந்தனை, முடிவு, கட்டுப்பாடு) இருக்கட்டும். அது பச்சாதாபத்தை விட (கழிவிரக்கம்) உயர்ந்தது.
- அர்ஜுனனுக்குத் தாபம் இருந்தது. அவன் போர் தொடங்குவதற்கு முன்னரே அதன் விளைவைப் பற்றிச் சிந்தித்து கிருஷ்ணரின் அறிவுரையை நாடினான்.
- பாண்டவருள் மூத்தவரான தர்மரோ போர் நடந்து முடிந்தபின், இழப்புக்குப் பின்னர் பச்சாதாபம் கொண்டார். காரணத்தை யோசி, பகுத்தறி.

(தொடரும்)

# மாகாண சபைத் தேர்தல்கள்

31

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### வாக்காளர் அட்டைகள் எப்போது வழங்கப்படுகின்றன?

மாகாண சபைகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கமைய உரிய மாகாண சபை அதிகார எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட சகல வாக்காளர்களுக்கும் தேர்தல் தினத்திற்கு 7 நாட்களுக்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு வாக்காளர் பெயர், முகவரி, பதிவு தொடர்பான தகவல்கள் மற்றும் வாக்கினைப் பிரயோகிப்பதற்காக செல்ல வேண்டிய வாக்குச் சாவடி, வாக்களிப்புத் திகதி மற்றும் நேரம் ஆகிய தகவல்கள் உள்ளிட்ட உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையொன்று சாதாரண தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். சட்டத் தேவைப்பாடொன்றல்லாத போதிலும் வாக்காளர்களின் வசதி கருதி உரிய மாவட்டத்திற்காகப் போட்டியிடும் கட்சிகள் மற்றும் குழுக்களின் வேட்பாளர்களின் இலக்கம் மற்றும் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள பட்டியலொன்று இந்த உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளோடு ஒவ்வொரு வீட்டுக்கும் பகிர்ந்தளிப்பது வழக்கமாகும்.

### மேல் மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்

2009 ஆம் ஆண்டின் மேல் மாகாணசபைத் தேர்தலில் பின்வரும் கட்சிகள் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டணி (ஐமசுமு), ஐக்கிய தேசியக்கட்சி (ஐதேக), மக்கள் விடுதலை முன்னணி (JVP), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC), ஜனநாயக ஐக்கிய முன்னணி (ஜஐமு), இடதுசாரி முன்னணி, ஐக்கிய சோசலிச கட்சி, ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, ருஹுனு ஜனதா பக்சய, ஜாதிக சங்வர்தன பெரமுன, நவ சிஹல உறுமய, எக்ஸத் லங்கா மஹா சபா, சோசலிச சமத்துவக் கட்சி, சிங்களயே மஹசம்மத பூமிபுத்ர பக்சய, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, தேசிய மக்கள் கட்சி, சுயேச்சைக்குழுக்கள் ஆகியன போட்டியிட்டன.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 20இல் தரப்பட்டுள்ளன.

| அட்டவணை 20<br>மேல் மாகாணசபை 2009 | |
|---|---|
| A | 3,820,214 |
| B | 2,415,879 |
| C | 88.993 |
| D | 2,326,886 |

மேல் மாகாண சபைத் தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை மற்றும் விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை என்பவை அட்டவணை 21 இல் காட்டப்பட்டுள்ளன.

ராகலை மாவட்டங்கள் சார்பாக வேட்புமனுக்கள் கோரும் அறிவித்தல் 2009.06.03 ஆம் திகதிய 1604/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டன.

2009.06.12 ஆம் திகதி முதல் 2009.06.24 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையிலான காலக்கெடுவுக்குள் பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்காக வேட்புமனுக்கள் கையேற்கப்படல் மேற்கொள்ளப்பட்டதோடு பதுளை மாவட்டத்திற்கு 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 4 சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வேட்புமனுக்களும்

அட்டவணை-21- விருப்புவாக்குகள் எண்ணல் (2009)
மேல் மாகாண சபை

| மாகாண சபை | மாவட்டம் | A | | B | |
|---|---|---|---|---|---|
| | | கட்சிகள் | சுயேச்சை | கட்சிகள் | சுயேச்சை |
| மேல் | கொழும்பு | 17 | 13 | 05 | - |
| | கம்பஹா | 11 | 4 | 04 | - |
| | களுத்துறை | 10 | 6 | 03 | - |

சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை, B- விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் ஐந்து கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அவ் 5 கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (1,506, 115), ஐக்கிய தேசியக் கட்சி (688, 253), மக்கள் விடுதலை முன்னணி (56,384), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (49,388), ஜனநாயக ஐக்கிய முன்னணி (11,970) ஆகும். அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 22 இல் காட்டப்பட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்டன. மொனராகலை மாவட்டத்திற்காக 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாலும் 3 சுயேச்சைக் குழுக்களாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மொனராகலை மாவட்டத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாலும் மற்றும் ஒரு சுயேச்சைக் குழுவினாலும் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

அதற்கமைய, பதுளை மாவட்

அட்டவணை 22- மேல் மாகாண சபைத் தேர்தல் 2009
கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | கட்சிகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | ஜஐமு | JVP | SLMC | மொத்தம் |
| கொழும்பு | 25 | 15 | 1 | 1 | 1 | 43 |
| கம்பஹா | 27 | 10 | - | 1 | 1 | 39 |
| களுத்துறை | 14 | 5 | - | 1 | - | 20 |
| Bonus | 2 | - | - | - | - | 2 |
| மொத்தம் | 68 | 30 | 1 | 3 | 2 | 104 |

### ஊவா மாகாணத்தின் மாகாணசபைத் தேர்தல் 2009

2009.05.28 ஆம் திகதியன்று ஊவா மாகாண சபை கலைக்கப்பட்டமையால் தேர்தல்கள் ஆணையாளரினால் பதுளை மற்றும் மொன

டத்திற்கு 14 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 336 வேட்பாளர்களும், 4 சுயேச்சைக் குழுக்களிலிருந்து 96 வேட்பாளர்களுமாக போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 432 ஆகும். மொனராகலை மாவட்டத்திற்காக 9 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து 126 வேட்பாளர்களும் 3 சுயேச்சைக் குழுக்களிலிருந்து 42 வேட்பாளர்களுமாக போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 168 ஆகும். அதற்கிணங்க ஊவா மாகாண சபைக்காக 32 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக போட்டியிட்ட மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 600 ஆகும். 2009ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8ஆம் திகதி ஊவா மாகாண சபைக்கான 5 ஆவது தேர்தல் நடைபெற்றது.

### ஊவா மாகாணத்தின் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள்

2009 ஆம் ஆண்டின் ஊவா மாகாணசபைத் தேர்தலில் பின்வரும் கட்சிகள் போட்டியிட்டன. ஐக்கிய மக்கள்சுதந்திரக்கூட்டணி (ஐமசுமு), ஐக்கிய தேசியக்கட்சி (ஐதேக), மக்கள் விடுதலை முன்னணி (JVP), மலையக மக்கள் முன்னணி (மமமு), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக ஐக்கிய முன்னணி, ஜாதிக சங்வர்தன பெரமுன, ஐக்கிய சோசலிச கட்சி, எக்ஸத் லங்கா மஹா சபா, ஜனசெத பெரமுன, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, சிங்களயே மஹசம்மத பூமிபுத்ர பக்சய, சுயேச்சைக் குழுக்கள் ஆகியன போட்டியிட்டன.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 22இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 22<br>ஊவா மாகாணசபை 2009 | |
|---|---|
| A | 875,456 |
| B | 613,133 |
| C | 34,424 |
| D | 578,709 |

ஊவா மாகாண சபைத் தேர்தலில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுக்களின் எண்ணிக்கை மற்றும் விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை என்பவை அட்டவணை 23 இல் காட்டப்பட்டுள்ளன. (தொடரும்...)

## 2,917...

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 474, 780 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாகக் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 389, 969 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## ஒரே நாளில்...

தாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் திணைக்களம் நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆண்கள் 102 பேரும் பெண்கள் 83 பேரும் உள்ளக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுடன் நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 10,689 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## யாழ்.பல்கலை...

வின் இரண்டாவது பகுதி தற்போதைய கொரோனாப் பெருந்தொற்று நிலைமைகளைக் கருத்திற்கொண்டு ஒக்ரோபர் 7,8,9ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஊடகப்பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இம்மாதம் 16ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக்குழு இன்று (நேற்று) 8ஆம் திகதி புதன்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சிசிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 7ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

எனினும் சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழா வைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ் நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## கர்ப்பமடை...

நிபுணர் ஹர்ஷ அத்தப்பத்து கோரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது நாட்டில் வேகமாகப் பரவி வரும் டெல்டா உரு திரிபு வைரஸ் கர்ப்பவதித் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்கும் ஆபத்தானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, சாத்தியமானால் கர்ப்பமடைவதை ஒரு வருடம் தள்ளிப்போடுவது சிறந்தது எனவும் மருத்துவ நிபுணர் மருத்துவர் ஹர்ஷ அத்தப்பத்து தெரிவித்தார். (ம)

## அமைச்சர்...

கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசாங்கத்தின் அனுசரணையில் யாழில் முன் னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண்காணித்து அவற்றை துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது யாழ். விஜயம் அமையவுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

கோவிட் - 19 தொற்று நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாடளாவிய ரீதியிலான அபிவிருத்திச்செயற்பாடுகளை அரசாங்கம் தடையின்றி முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-30)

## வவுனியாவில்...

இதில் குருநாகலைச்சேர்ந்த கே.திலக்குமார (வயது-50) மற்றும் கொழும்பைச் சேர்ந்த சுப்பிரமணியம் நிருபன் (வயது-31) எண்பவர்களே உயிரிழந்தவர்களாவர்.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பரொன்றும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த கப் வாகனம் ஒன்றும் நேருக்கு நேர் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன்குளம் சந்தியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-250,299)

## நம்பிக்கை...

என வடக்கு மாகாண முன்னாள் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிய விளக்கக் குறிப்பில்,

கடந்த 05.09.2021ஆம் திகதி ஒளிபரப்பாகிய spotlight நிகழ்ச்சியில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வட மாகாண சபையைக் குழப்புவதில் நிறைய அனுபவம்வாய்ந்த நானும் பாரிய கவனம் செலுத்தினேன் என்று குற்றம் சாட்டியிருந்தார்.

இது சில அச்சு ஊடகங்களிலும் செய்தியாக்கப்பட்டதால் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தல் மிக அவசியம் என்பதால் இந்த ஊடகச் சந்திப்பைக் கூட்டியிருக்கின்றேன்.

நான் செய்த தவறாக அவர் குறிப்பிட்டது 17 சபை உறுப்பினர்களுடன் சேர்ந்து மாகாண சபையைக் கலையுங்கள் என்ற கடிதத்தை ஆளுநரிடம் நான் கையளித்தமை பற்றியது.

இந்த விடயம் தொடர்பாக பல தெளிவுபடுத்தல்களை நான் கடந்த 5 வருடங்களாக வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறேன்.

ஆளுநருக்குக் கொடுத்த கடிதம் முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்பது மட்டுமே தவிர, சபையைக் கலையுங்கோ என்றல்ல என்பதை முதலில் குறிப்பிட விரும்புகின்றேன். முதலமைச்சர் அமைச்சர்களுக்கு எதிராக விசாரணைக் குழு ஒன்றை சபை நியமிக்க வேண்டும் என்ற முன்மொழிவைச் சமர்ப்பித்தபோது இதன் பொருட்டு சபை உறுப்பினர்களைக் கொண்ட தெரிவுக்குழுவை நியமிக்க முடியுமே தவிர, முதலமைச்சர் கோரியபடி வெளியாட்கள் கொண்ட குழுவை நியமிப்பதை நிராகரித்ததே நான்தான்.

முதலமைச்சர் தமக்குரிய சிறப்புரிமைக்கமைய அமைச்சர்களை நீக்கும்படி ஆளுநருக்கு சிபாரிசு செய்யலாம் என்பதால் விசாரணைக்குழு தேவையற்றது என்பதே எமது நிலைப்பாடாக இருந்தது.

அதனால் சுமார் ஒன்றரை நாள் விவாதத்தின் பின்பு முதலமைச்சர் தாமே ஒரு குழுவை நியமிக்கலாம் என்று நாம் கூறியதற்கு அமையவே விசாரணைக் குழு அவரால் நியமிக்கப்பட்டது.

அந்த அறிக்கையை சபையில் சமர்ப்பித்தபின் நடைபெற்ற விவாதத்தின் முடிவில் பொ.ஐங்கரநேசன் தன்னிலை விளக்கம் அளித்த நிலையில் முதலமைச்சர் அதனையும் பரிசீலித்து அவரது முடிவை இரண்டு நாட்களின் பின்பு தெரிவிக்கலாம் என்ற எனது கோரிக்கையை நிராகரித்து தமது தீர்மானித்தை வாசிக்கத் தொடங்கியதும் அநேகமான மாகாண சபை உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர். இவ்வாறான நடவடிக்கை பற்றி எனக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் பிற்பகல் 3 மணிக்கு கட்சித் தலைமையகத்தில் ஒரு கூட்டம் இருப்பதாகவும் அதில் கலந்து கொள்ளுமாறு எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைய நான் சபை அமர்வு முடிந்த பின்பு கட்சித் தலைமையகத்துக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு பின்பு சென்றபொழுது அநேகமான உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதற்கு ஆளுநருக்குச்சமர்ப்பிப்பதற்கான கடிதம் கணினியில் தட்டச்சிடப்பட்டுக் கொண்டிருந்தது. அது கட்சி உறுப்பினர்களின் முடிவு என எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

அதில் எனது பெயர் முதலில் இருந்தபோது அப்படிபோட வேண்டாம். அது தவறு என பலமுறை வற்புறுத்தியும் அதனை நிராகரித்து எனது பெயரை முதலில் தட்டச்சாக்கிவிட்டார்கள்.

வேறுவழியின்றிகையொப்பமிட நான் நிர்ப்பந்திக்கப்பட்டேன். இந்தக் கடிதத்தை ஆளுநரிடம் வழங்குவதற்கு என்னையும் அழைத்தார்கள். அப்படி நானும் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் எனது வாகனத்தில் புறப்படும்போது கமலேஸ்வரன் அந்தக்கடிதக்கோவையை கொண்டு வந்து என்னிடம் தந்தார்.

அதை நான் ஏற்காமல் இந்த நடவடிக்கையை முன்னெடுத்தவர்களே கொடுக்க வேண்டும் எனக் கூறியதும் அவர் அதை எடுத்துச் சென்றார். பின்பு ஆளுநரைச் சந்திக்க மேல்மாடியில் உறுப்பினர்களும் ஊடகவியலாளர்களும் உட்சென்றபோது ஏற்பட்ட நெருக்கடிக்குள் அந்தக் கோவை எனது கையில் திணிக்கப்பட்டது.

இதனால் நான் அதிர்ச்சியடைந்தபோதும் அந்த இடத்தில் நின்று பிரச்சினைப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு கடிதம் என்னால் ஆளுநரிடம் சகல உறுப்பினர்கள் முன்னிலையில் கையளிக்க வேண்டியதாயிற்று.

எனவே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையின் முன்னெடுப்பிலோ வேறு விதத்திலோ எனக்கு எதுவித சம்பந்தமும் இல்லை என்பதைக் காணலாம். சகல உறுப்பினர்களும் சேர்ந்து கட்சி சார்ந்து கட்சித் தலைமையகத்தில் எடுத்த முடிவுக்கு எப்படி என்னைப் பொறுப்பாளி ஆக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-33)

## வடக்கில் 7...

டைய ஆண் ஒருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 81 வயதுடைய ஆண் ஒருவரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற கோண்டாவிலைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 66 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்தனர்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வரணியைச் சேர்ந்த 80 வயது மூதாட்டி மரணமானார்.

மேலும் மன்னாரில் 72, 78 வயதுடைய பெண்கள் கொரோனாவால் மரணமடைந்துள்ளனர். (ம-30,33,285)

## திட்டங்களை...

கருத்துத் தெரிவிக்கையில்,

13ஆம் திகதிதொடக்கம் திறப்பதாயின் அன்றைய தினம் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய முறை குறித்து, அந்தந்தப் பிரிவுக்கு பொறுப்பான அதிகாரிகள் திட்டமிட்டு அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அவ்வாறு பகிரங்கப்படுத்தினால் நாட்டைத் திறப்பதற்கு தகுந்த சூழ்நிலை உள்ளதாக திருப்தியடையலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## கொரோனா...

க.மகேசன் பொதுமக்கள் மிக விழிப்பாக இருங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில்,

பொது முடக்கத்திலும் பொதுமக்கள் கட்டுப்பாடுகளை அனுசரித்து நடந்து கொள்ளாமை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள பொது முடக்கத்தை துஷ்பிரயோகம் செய்யாது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுவதன் மூலம் இறப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார். (ம-33)

## இந்தியக் குடி...

ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தச்சட்டத்தின் மூலம், சட்டப்படியான சமத்துவம், சட்டப்படியான பாதுகாப்பை மத்திய அரசாங்கம் மறுக்க முடியாது.

அத்துடன் நாட்டுக்கு ஏதிலிகளாக வருவோரை மதரீதியாகப் பாகுபடுத்திப் பார்க்கும் வகையில் சட்டம் உள்ளது.

எனவே இந்தச் சட்டத்தை மத்திய அரசாங்கம் இரத்து செய்ய வேண்டும் என்று, இது தொடர்பான யோசனையை முன்வைத்து உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மதநல்லிணக்கம், மதசார்பின்மை கோட்பாடுகளுக்கு இந்தச் சட்டம் உகந்ததாக இல்லை. எனவே இந்திய நாட்டின் ஒற்றுமை, மத நல்லிணக்கத்தை போற்றிப் பாதுகாக்க இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம் இரத்து செய்யப்பட வேண்டும் என்று ஸ்டாலின் தமது உரையின் போது கோரிக்கை விடுத்தார். (ம)

## யாழ் - 41...

எப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழில் 41 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 75 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-33)

BOC Travels (Pvt) Ltd
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்
Hospital Road, Jaffna.
எமது நிறுவனம் தற்போதைய தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள வேளையிலும் வெளிநாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டை வழங்குகின்றது.
24
070 384 9335/070 395 1794
sureshk@boctravels.com
(C-2622)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# மரண அறிவித்தல்

## துரையப்பா கோணேந்திரன்



அளவெட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட துரையப்பா கோணேந்திரன் (கண்ணன்) நேற்று (08.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாலசவுந்தரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பாலேந்திரன், நிசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சேகரின் மாமனாரும் கயூரிக்கா (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), அக்சயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.09.2021) வியாழக் கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தம்மலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி பிரான்சிஸ்கா நீக்கலஸ் (பூமணி)

மலர்வு : 02.09.1935 உதிர்வு : 08.09.2021



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரான்சிஸ்கா நீக்கலஸ் நேற்று (08.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோகு - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற மனுவேற்பிள்ளை - பஸ்தியாம்பிள்ளை நீக்கலஸின் அன்பு மனைவியும் யஸ்ரின் சந்தியோகுவின் (பிரான்ஸ்) அன்புச் சகோதரியும் ரூபி ஜொய்ஸின் (பிரான்ஸ்) அன்பு மைத்துனியும் செல்வரஞ்சினி, யசிந்தா ஜெயராணி (பிரான்ஸ்) காலஞ்சென்ற ரீற்றா செல்வராணி மற்றும் அனற் அசெம்டா (சுவிஸ்), மெலோ ஞானசீலன் (தபாலகம்-கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் யோகநாதன் மற்றும் ஜெயராசா (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜோன்ஸ்ரன் மற்றும் மேரி அனித்தா (ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜெறோம் (Software Engineer), ஜெறோசன் (Marketing Assistant - CLC), ஜெறோசினி (யா/ நெல்லியடி மத்திய கல்லூரி), நிசாந்தியா (பிரான்ஸ்), அன்ரியா (பிரான்ஸ்), ஜெசிக்கா (லண்டன்), சபிதா (சுவிஸ்), சரீனா (சுவிஸ்), சஜான் (சுவிஸ்), அலெக்ஷா (J/M.G.H.S), நிலுக்ஷா (J/N.M.M.T.M.S), அனிஸ்ரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் லேனா (பிரான்ஸ்), மிலா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் யூட்டா (பிரான்ஸ்), கரோலின் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (09.09.2021) வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் ஆசீர்வதிக்கப்பட்டு கரவெட்டி சேமக்காலையில் (கிரிப்பல்லி) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கரவெட்டி

மெலோ ஞானசீலன் (மகன்) :
077 850 7052

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



தோற்றம் 25 - 12 - 1931
மறைவு 03 - 09 - 2021

## மகேஸ்வரி காசிநாதர்

யாழ். சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி காசிநாதர் கடந்த 03.09.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி வாரித்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் காசிநாதரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜபூபதி, சிவகுருநாதன், யோகநாதன் மற்றும் அருளம்மா, நேசம்மா, தில்லைநாதன், தம்பிநாதன், செல்வராணி, செல்வமலர், சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவீந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), கலாமினி (இலங்கை), விமலேந்திரன் (பிரித்தானியா), இந்திரகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தினி, சிவரட்ணம், மோகனராஜன், பாலேந்திரா, கோமதி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் கலக்சன், பிரதட்ஷன் - பிரதீபா, சங்கீதன் - ரம்மியா, கௌதம், கௌசிகா, நிவிசாந் - ஜனனி, அனுசாந், நிரோஜன், பிரணவன், சாய்ரூபன், கிரிசா, கரிஸ், சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாறாலேயா, லூயிஸ் அயான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (08.09.2021) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற்றது.



தோற்றம் 14 - 02 - 1924
மறைவு 06 - 09 - 2021

## வாரித்தம்பி காசிநாதர்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி காசிநாதர் கடந்த 06.09.2021 (திங்கட்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வாரித்தம்பி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் பத்மநாதனின் அருமை பெறாமகனும் ரவீந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), கலாமினி (இலங்கை), விமலேந்திரன் (பிரித்தானியா), இந்திரகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி, சிவரட்ணம், மோகனராஜன், பாலேந்திரா, கோமதி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் கலக்சன், பிரதட்ஷன் - பிரதீபா, சங்கீதன் - ரம்மியா, கௌதம், கௌசிகா, நிவிசாந் - ஜனனி, அனுசாந், நிரோஜன், பிரணவன், சாய்ரூபன், கிரிசா, கரிஸ், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் சாறாலேயா, லூயிஸ் அயான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.09.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2632)

சங்கம் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

ரஞ்சி (மகள்) : +4917630165578
ரவி (மகன்) : +41796762110
கலா (மகள்) : 94775480078

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.